RESOURCE PACK

stages
theatre
group

Directed by **JAYAMPATHI GURUGE**

# WALKING PATH

## வோக்கிங் பாத் වෝකින්ග් පාත්

a play without words, devised along the walking paths of Colombo

# WALKING PATH

## வோக்கிங் பாத் වෝකින්ග් පාත්

a play without words – devised along the many pristine walking paths of the city of Colombo

**WRITTEN BY** Ruwanthie de Chickera
**DIRECTED BY** Jayampathi Guruge

**A Stages Theatre Group presentation**
First performed in July 2014
Lionel Wendt Theatre
Colombo, Sri Lanka

“வோக்கிங் பாத்”

வார்த்தைகள் இல்லாத நாடகம் – இயக்கம் : ஜயம்பத்தி குருகே / நலின் லுசேனா

“வோக்கிங் பாத்” - வார்த்தைகள் இல்லாத நாடகம் என்பது இலங்கையினுள் 30 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் பின்னர், நாட்டினுள் இடம்பெற்ற அரசியல்,சமூக,கலாச்சார மாற்றங்களை தழுவி, டிவைசின் (devising) முறையின் ஊடாக உருவாக்கப்பட்ட இலங்கையின் முதலாவது உரையாடல் இல்லாத நாடகமாகும்.

நகர அலங்காரம், இராணுவமயமாக்கம், கலாச்சார தடைகள் பற்றி இந்நாடக உருவாக்கத்தினுள் கலந்துரையாடுவதற்கு முயற்சிக்கப்படுகிறது. யுத்தத்திற்கு பின்னரான முதல் காலப்பகுதியின் நாட்டின் தலைநகரமான கொழும்பு மற்றும் பிரதான நகரங்களை சுற்றி நாட்டு பிரஜைகளுக்கு உடற்பயிற்சியில் ஈடுபடுவதற்காகவும் சுதந்திரமாக காலத்தை கழிப்பதற்காகவும் ஒதுக்கப்பட்ட நிலப் பிரதேசத்தில் கட்டியெழுப்பப்பட்ட “வோக்கிங் பாத்” எனும் நடைபாதையோடு உருவாகிய உப கலாச்சாரம் மற்றும் மனித நடவடிக்கைகளை கற்ற கலைஞர்களினால் இந்த ஆக்கம் கட்டியெழுப்பப்பட்டது.

“வோக்கிங் பாத்” - இந்தியாவில் 2015ம் ஆண்டு மும்பையில் இடம்பெற்ற சர்வதேச இளைஞர்களின் (25 வயதிற்கு குறைந்த) நாடகவியலாளர்களுக்காக நடாத்தப்படும் தேஸ்ப்போ - 16 (Thespo 16) நாடக விருது விழாவை பிரதிநிதித்துவம் செய்து, சிறந்த இயக்குனர், சிறந்த நாடகம் போன்ற பிரதான விருதுகள் சிலவற்றை “வோக்கிங் பாத் - வார்த்தைகள் இல்லாத நாடகம்” பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பும் கிடைத்தது.

“வோக்கிங் பாத்” நாடகத்தை உருவாக்கி ஆறு வருடத்திற்கு பின்னரே இந்த கற்கை வள தொகுப்பு எழுதப்பட்டது

# உள்ளடக்கம்

## 01

“வோக்கிங் பாத்” வார்த்தைகள் இல்லாத நாடகம்” கற்கை வள தொகுப்பு

## 02

வோக்கிங் பாத் பற்றி
வார்த்தை இல்லாத நாடகமாக உருவாக்குவதற்கான ஊக்குவிப்பு

- சுய ஊக்குவிப்பு
- அரச கட்டுப்பாடு மற்றும் சுய கட்டுப்பாடு
- நகர மாற்றம் மற்றும் மனிதர்களின் மௌனம்

## 03

உருவாக்க செயன்முறையின் ஆரம்பம், கற்கை மற்றும் தகவல் சேகரிப்பு.. “வோக்கிங் பாத்” வார்த்தைகள் இல்லாத நாடகம்

- முதல் படிமுறை – வாழ்க்கையில் வார்த்தைகள் இல்லாத தருணத்தைத் தேடி
- இரண்டாவது படிமுறை – எண்ணக்கருவை கட்டியெழுப்புதல்
- மூன்றாவது படிமுறை – நடைபாதை பற்றிய கற்கை
  - நடைபாதைகளில் மனிதர்களின் நடவடிக்கைகளை கற்பதும் குறிப்பெடுத்தலும்
    - உயர் தரமான சொகுசு வாகனம் மற்றும் முச்சக்கரவண்டி
    - பெருத்த உடல்கள் மற்றும் மெலிந்த உடல்கள் பெருத்த
    - அமைச்சர்கள் மற்றும் பாதுகாவலர்கள்
    - ஒழுக்கமான காதலர்கள் மற்றும் விசிலடிக்கும் காவலாளிகள்
    - இளமையான பெற்றோர் மற்றும் குழந்தைகள்
    - Zumba Dance மற்றும் நடனம்
    - நாகரீக யோகா மற்றும் யோகா
    - சிவில் இராணுவம்
    - சுதந்திரம் மற்றும் போலிஸ்
    - ஓடும் நாகரீகம்
    - செல்பி மற்றும் நடமாடும் ஹெட் செட்
    - தனிமைபடுத்தப்பட்ட மனிதர்கள்
    - தடைசெய்யப்பட்ட வியாபாரிகள்
    - தடை - பதாதைகள்
  - நடைபாதையில் கட்டியெழுப்பப்பட்ட உரையாடல் தொகுப்பு

## 04

"வோக்கிங் பாத்" -
வார்த்தை இல்லாத நாடகம்
பதினேழு இலக்கங்கள்
உள்ளடக்கப்பட்ட
நாடகமாக மாற்றமடைதல்

- பாத்திரத்தை கட்டியெழுப்புதல்
- நடிப்பை வடிவமைத்தல்
- "வோக்கிங் பாத்" - வார்த்தை இல்லாத நாடகம் உருவாக்கத்தின் டிவைசின் [Devising] செயன்முறைகள், பயிற்சி செயன்முறைகள் மற்றும் பதினேழு இலக்கங்கள் உள்ளடங்கிய நாடகம் உருவாக்கப்பட்ட விதம்

- Scene 1 – புதிய யுகத்தின் ஆரம்பம்...! கஷ்ட காலத்தின் முடிவு!
- Scene 2 – சுதந்திர தொடர்புகள்.... திறந்த அவகாசம்...
- Scene 3 – சிங்கத்தை மாற்றம் செய்தது யார்? கர்ஜனை
- Scene 4 – இறுதித் துளி வரை
- Scene 5 – பறவைகளிடமிருந்து பாதுகாப்பாயிருங்கள்
- Scene 6 – அது நானில்லை
- Scene 7 – "ஜிங் ஜிங் தாரா" என்னை கட்டுப்படுத்தும் தொலைப்பேசி
- Scene 8 – ஞாபகம் ஒரு பழைய நாகரீகமாக
- Scene 9 – selfish சமூகத்தின் selfie ஒன்று
- Scene 10 – நகரத்தின் பாலியல்
- Scene 11 – பெட் (Battery) குழந்தைகள்
- Scene 12 – அந்த அனைத்து இரைச்சலுக்கும் பின்..
- Scene 13 – எனது தொலைப்பேசியின் உலகம்
- Scene 14 – ஓடுப்பாதையின் பாதச் சுவடுகள்
- Scene 15 – 'சிலது' தடைசெய்யப்பட்டுள்ளது.
- Scene 16 – கூட்டத்தில் தனியாக
- Scene 17 – முட்டாள் தீர்மானம் எடுக்காதீர்கள்.

## 05

"வோக்கிங் பாத்"
வார்த்தைகள் இல்லாத நாடகம்"
முதற்காட்சி மற்றும் மாற்றம் ஒன்று

- தடைகளுக்கிடையே பகிரங்க நாடகக் கட்டுப்பாடு அனுமதியை பெற்றுக்கொள்ளல்
- முதற்காட்சி மற்றும் மாற்றத்தை எதிர்பார்க்கும் சமூகம்

## 06

"வோக்கிங் பாத்" வார்-
த்தைகள்
இல்லாத நாடகம் உருவா-
க்கத்துடன்
இணைந்த குழுவினர்

# 01

## "வோக்கிங் பாத்"
## வார்த்தைகள் இல்லாத நாடகம்

கற்கை வள தொகுப்பு



# அறிமுகம்

"வோக்கிங் பாத் -
வார்த்தைகள் இல்லாத நாடகம்"

இந்நாடகத்திற்கு பின்னனியாக அமைந்த போருக்கு பின்னரான காலம் (2009 – 2014 வரை) இலங்கையில் இடம்பெற்ற அரசியல் நிலமையை கருத்திற்கொண்டு கட்டியெழுப்பப்பட்ட நகர அலங்காரம், இராணுவமயமாக்கம் மற்றும் கலாச்சார தடைகளுடன் இந்நாடக செயன்முறையில் நாடக குழுக்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் மற்றும் முகம்கொடுத்த சவால்கள் பற்றியே இந்த கற்கை வள தொகுப்பின் மூலம் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

# வோக்கிங் பாத் எனும் நடமாடும் பாதை

இலங்கையினுள் பல தசாப்தங்களாக இடம்பெற்ற உள்நாட்டு போர் முடிவடைந்த உடனேயே நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நகர அலங்காரம் எனும் பெயரில் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய கொழும்பு நகரை சூழவுள்ள சுதந்திர சதுர்க்க சூழல் "விஹாரமாதேவி பூங்கா, தியத்த பூங்கா, தியவன்னா வோக்கிங் பாத்" Urban Wetland park (Nugegoda) போன்ற இடங்கள் மனிதர்கள் நடமாடுவதற்கும், உடற் பயிற்சி செய்வதற்கும் அல்லது சுதந்திரமாக காலத்தை கடத்துவதற்கும் தகுந்த இடமாக மாறியது.

- இந்த இடம் ஏன் உருவாக்கப்பட்டது?
- யாருக்காக இந்த இடத்தை உருவாக்குகிறீர்கள்?
- இந்த இடத்தில் இருக்கும் மனிதர்கள் யார்?
- மனிதர்கள் ஏன் ஓடுகிறார்கள்?
- இந்த இடத்திற்கு வரும் மனிதர்களை பார்த்துக்கொண்டிருப்பவர்கள் யார்?
- இந்த இடம் ஏன் அமைதியாக இருக்கிறது?
- யாருக்கு பயம்?
- இந்த இடத்தில் என்ன செய்யலாம்?
- இந்த இடத்தில் என்ன செய்ய முடியாது?
- இந்த இடம் ஏன் மிக சுத்தமாக இருக்கிறது?
- இந்த இடத்தில் கைத்தொலைப்பேசியுடன் மனிதர்களுக்கு உள்ள தொடர்பு என்ன?
- இந்த இடத்தில் மனிதர்கள் தனிமையாக இருப்பது ஏன்?
- இந்த இடத்தில் மனிதத் தொடர்புகள் எவ்வாறானது?

# 02

கேள்விகளுக்கு குழுவாக பதிலை தேடி செல்வதன் ஊடாகவே “வோக்கிங் பாத்" வார்த்தைகள் இல்லாத நாடகம்” உருவானது.



## “வோக்கிங் பாத் - வார்த்தைகள் இல்லாத நாடகம்” உருவாவதற்கு ஏற்பட்ட ஊக்குவிப்பு

“நடமாடும் பாதை தொடர்பில் வார்த்தை இல்லாத நாடகம் ஒன்றை செய்வதற்கு தாக்கம் செலுத்திய பிரதான காரணிகள் பற்றியே இந்த அத்தியாயத்தினுள் கலந்துரையாட எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நாடகத்தின் இயக்குனரான ஜயம்பத்தி குருகேவிற்கு வார்த்தை இல்லாத நாடகம் ஒன்றை உருவாக்குவதற்கு இருந்த விருப்பம், போருக்கு பின்னரான காலகட்டத்தில் நாட்டினுள் இடம்பெற்ற அரச கட்டுப்பாடுகள் மற்றும் சுய கட்டுப்பாட்டு சுபாவங்கள் மற்றும் கொழும்பு நகரத்தின் சுபாவங்கள் வேகமாக மாற்றமடைதல் பற்றியும் சமூகத்தின் அமைதி பற்றியும், இந்த நாடகத்தை உருவாக்குவதற்கு நாடகத்தின் எழுத்தாளரான ருவன்தி டி சிக்கேராவிற்கு இருந்த தேவை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சுய ஊக்குவிப்பு

ஜயம்பத்தி குருகே அவர்கள் கொழும்பு அழகியற்கலை பல்கலைகழகத்தில் கல்வி கற்கும் காலத்தில் (2009 – 2014) physical theater, Dance Theater, Nonverbal Theatre, Contemporary Theatre, Contemporary Dance போன்ற பல்வேறு நடிப்பு கலை வடிவங்கள் தொடர்பில் மேற்கொண்ட கற்கைகளின் பெறுபேராகவே வார்த்தை இல்லாத சிறு நாடகங்கள் மூன்றை உருவாக்கினார்.அதில் அவர் வார்த்தைகளை மீறிச் சென்று உடலை பிரதான ஊடகமாக பாவிக்க முடியுமா? என்பது பற்றி கற்பதற்கு அவர் அதிக ஆர்வத்தை செலுத்தி இருந்தார்.

இதில் அவரால் தயாரிக்கப்பட்ட “11 கதிரைகள்” போன்ற கேள்விகளுக்கு குழுவாக பதிலை தேடி செல்வதன் ஊடாகவே “வோக்கிங் பாத் - வார்த்தைகள் இல்லாத நாடகம்” உருவானது.

பல்கலைகழகத்தில் இரண்டாவது வருடத்தின் போது ஜயம்பத்தியால் தயாரிக்கப்பட்ட “பிரேம்ஸ்” ஊடாக சித்திர கலைஞர் ஒருவர் சமூகத்தை அனுபவிக்கும் முறை மற்றும் அவர் அந்த அனுபவத்தினை தமது ஆக்கத்திற்குள் இணைத்துக்கொள்வது எவ்வாறு என்பது பற்றி வில்சன் வெங்கோ கலைஞரின் வாழ்க்கையை அடிப்படையாக கொண்டு தயாரிப்பதற்கு மேற்கொண்ட முயற்சியையும் காண முடியும்.

பல்கலைகழகத்தில் இறுதி வருடத்தில் ஜயம்பத்தியால் தயாரிக்கப்பட்ட “முஜரி” நாடகம் ஊடாக கலந்துரையாட முயற்சிப்பது, அக்காலத்தில் (2013 வருடத்தின் இறுதிகளில்)பொது சமூகத்தினுள் போன்று பல்கலைகழகத்தினுள்ளும் இடம்பெற்ற மனித நடைமுறையில் ஒருநிலைத் தன்மையாகும். மனிதர்கள் அழுத்தம் காரணமாக தனக்குள்ளேயே ஒன்றும் செய்துக்கொள்ள முடியாது இருக்கும் விதம்,கேள்வி தொடுப்பதை தவிர்த்து யாராவது ஒருவர் பின்னால் செல்லும் சுபாவம் மற்றும் மனிதர்களின் சுய தடைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்திக்கொண்டிருக்கும் விதிமுறைகள் பற்றியதாகும் (by the end of 2013).

# அரச கட்டுப்பாடு மற்றும் சுயமான கட்டுப்பாடு

யுத்தம் இடம்பெற்ற காலம் மற்றும் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியின் ஆரம்பத்துடன் (2009 - 2014) இலங்கை சமூகத்தில் அரச கட்டுப்பாடு மற்றும் சுய கட்டுப்பாடு அதிகமாக இடம்பெற்றதுடன் அது தொடர்பில் ஜயம்பத்தி குருகே அக்காலகட்டத்தில் எழுதிய குறிப்பு.

“யுத்தம் இடம்பெற்ற காலத்தில் மற்றும் யுத்தத்தின் பின்னர் இலங்கையினுள் தனிநபர்களின் அடிப்படை ஜனநாயக கருத்து சுதந்திரத்தை பல்வேறு முறையில் மட்டுப்படுத்துவதற்கு ஆயத்தமாவதை காணக்கூடியதாக இருந்தது. அதேபோன்று சுதந்திரமாக கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும், கலைஞர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் காணாமல் போதல்,கடத்தல் மற்றும் அச்சுறுத்திய சந்தர்ப்பங்கள் பற்றி பல்வேறு நிகழ்வுகள் ஊடாக அறிந்துக்கொள்ள முடிந்தது. சட்டம் பற்றிய நம்பிக்கைகள் குறைந்து போனது. தமது வரையறை எந்தளவானது என்று தெரிந்துக்கொண்டு செயற்படல் வேணடுமென்பதே சமூகத்திலுள்ள அநேகமானோரின் பொது கருத்தாக அமைந்துள்ளதையும் காணக்கூடியதாக இருந்தது.
நாட்டினுள் என்னால் செய்யக்கூடியது என்ன?
என்னால் செய்ய முடியாதது என்ன?

நான் நாட்டினுள் எந்த வரையறைக்குள் நடந்துக்கொள்ள வேண்டுமென்று எனக்கு தெரியாது. மிக கவனமாக வாழ்க்கையை பாதுகாத்துக்கொண்டு,விருபத்துடனோ அல்லது விருப்பமில்லாமலோ நடைமுறையிலுள்ள முறைமையோடு இணைத்துக்கொள்வதற்கு பாடுபடும் ஒரு குழு,நெருக்கடிக்கு உள்ளான சிறுபான்மை இனத்தவர், மூடநம்பிக்கையை பரப்பும் சிலர்,பணத்திற்கு பின்னால் ஒடும் சமூக வர்க்கம்,அதிகாரத்திற்கு முன்னால் தன்மானத்தை விட்டுகொடுக்கும் ஊடக நிறுவனங்கள், அமைதி காக்கும் புத்திஜீவிகள், படிப்படியாக இராணுவமயமாகும் சமூகம் போன்ற பெரும்பான்மை மக்களின் செயற்பாடுகளை என்னால் காண முடிந்தது.”
எனது அப்பா ஒருநாள் தொலைப்பேசியில் என்னை தொடர்பு கொண்டு கூறினார்.

“சின்ன மகனே உன்னால் நடைமுறையிலிருக்கும் முறைகளை தனியாக மாற்றமுடியாது. இப்போது எனக்கு 69 வயதாகிறது. எங்களுக்கு தெரிந்த காலத்திலிருந்து இந்நாட்டின் அரசியல் நடவடிக்கைகள் இவ்வாறானதுதான். நீங்கள் இளைஞர்கள் என்பதால் முரட்டுத்தனமான வேலைகளை செய்வதற்கு முயற்சிக்க வேண்டாம். உனக்கு எதாவது நடந்தால் உன்னை சுற்றி இருப்பவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். யார் இருந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது.நான் உனக்கு ஒன்றும் செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. இதுதான் இந்நாட்டின் இதுவரை காலமும் நடைமுறையிலுள்ள முறை” என்றார்.

“நான் மிகவும் சிறிய மனிதன். ஆனால் எங்கள் வீட்டார் என்னை பற்றி மிக பயத்துடன் இருந்தார்கள். தன் அருகில் இருப்பவரை பாதுகாத்துக்கொள்ளவே அநேகமானோர் முயற்சித்தனர். சமூகத்தை பார்த்தாலும், அருகில் இருப்பவரை பார்த்தாலும்,சுய கட்டுப்பாடு அல்லது சுய கட்டுப்பாட்டில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கும் சூழலையே காணக்கூடியதாக இருந்தது. மாற்றத்தை எதிர்பார்க்கும் சிறுபிரிவினருக்கிடையே நானும் இருப்பது பிரச்சினைக்குரியது என்று நன்றாக அறிந்க்கொள்ளக்கூடிய காலத்தில்,சமகால கலைஞர்கள் இந்த போராட்டத்திற்குள் முடிந்தளவு தமது கலை செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் அல்லது அதனுள் கதைக்கப்படும் சமகால அரசியல் யதார்த்தத்தை வெளிக்காட்டுவதற்கும் முயற்சிப்பதை காணக்கூடியதாக இருந்தது. அவ்வாறான பின்னனியில் எனக்கு உண்மையாக என்ன செய்ய முடியும்? என்ற போராட்டத்தில் நானும் சில காலங்கள் இருந்தேன். அந்த போராட்டத்தை ஒரு ஆக்கத்தினுள் இணைத்துக்கொள்ள முடியுமா என்ற யோசனை எனக்குள் எந்நேரமும் ஏற்பட்டது.”

**ஜயம்பத்தி குருகே** (June 2014)

# நகர மாற்றமும் மனிதர்களின் மௌனமும்

யுத்தத்தின் பின்னர் இலங்கையினுள் அரச பங்களிப்புடன் நகர அலங்கார வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது. இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக நகர அலங்காரம் மட்டுமின்றி நகர மாற்றமும் மிக வேகமாக இடம்பெற்றதுடன் அதற்கு இணையாக புதிதாக நிர்மானிக்கப்படும் கட்டிடங்களுக்கு ஏற்றவாறு பல இணை கலாச்சாரங்கள் உருவாவதையும் காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறு மாற்றமடைவதை ஒரு சமூகம் என்ற வகையில் இதற்கு இணக்கம் காட்டுகிறார்களா? இல்லையா? என்பது பற்றிய கருத்தாடல்களை இச்சமூகத்தினுள் காணக்கிடைக்கவில்லை. மொத்த சமூகமும் இதை மௌனமாக பார்த்துகொண்டிருப்பதை மட்டும் காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறு கட்டியெழுப்பப்படும் புதிய சமூகத் தொகுதிகள் மற்றும் அதன் பண்புகள் எந்த நோக்கத்துடன் முன்னோக்கி இட்டுச்செல்லப்படுகிறது என்பது பற்றி ருவன்தி டி சிக்கேரா போன்று ஸ்டேஜஸ் நாடக குழுவும் கவனம் செலுத்தியது. அதேபோன்று நாட்டினுள் இடம்பெறும் மௌனம் பற்றி கலந்துரையாடல்கள் ஆரம்பமாகின. அந்த கலந்தரையாடலில் கவனம் செலுத்தப்பட்ட கருத்துகள் சில பின்வருமாறு.

- நகரத்தை சுத்தம் செய்தல்
- பழைய கட்டிடங்களை புதுப்பித்தல்
- பிச்சைக்காரர்களை வெளியேற்றுதல்
- வீதி நாய்களை வெளியேற்றுதல்
- கொழும்பு நகரை சூழவுள்ள தோட்டங்களில் (சேரிபுரங்களில்) வாழும் மனிதர்களை வெளியேற்றுதல்
- கலாச்சார வடிவமைப்புகளை மாற்றம் செய்தல்
- வெளிநாட்டவர்களுக்கும் மேல் மட்ட மத்திய வர்க்கத்தினருக்காகவும் இடங்களை நிர்மாணித்தல்
- வெளிநாட்டு முதலீட்டிற்காக நாட்டிலுள்ள இடங்களை வெளிநாட்டுக்கு வழங்குதல்
- சந்தை (மார்க்கட்) மற்றும் நகர அலங்காரம்
- நகரங்களை சூழவுள்ள இடங்களில் கட்டியெழுப்பப்படும் செயற்கை சிறுவர் பூங்காக்கள் மற்றும் உடற் பயிற்சிக்காக நடமாடும் பாதைகளை அமைத்தல்.

இவ்வாறான தற்கால சமூகத்தினுள் நிகழும் தன்மைகளை பற்றி கற்றுக்கொள்வதன் ஊடாக இதை நாடகமாக உருவாக்கி தனது கருத்துக்களை சமூகத்திற்கு கொண்டு சேர்ப்பதே “ஸ்டேஜஸ் நாடக குழுவின்” தேவையாக இருந்தது. அதனால் நடமாடும் பாதையை சூழ கட்டியெழுப்பப்படும் உப கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட வார்த்தை இல்லாத நாடகம் ஒன்றை உருவாக்குவதற்கான கலந்துரையாடல் இடம்பெற்றது. அதோடு இந்த உருவாக்கத்தை ஆரம்பிக்கும்போது எற்படக்கூடும் என்ற பிரச்சினைகள் தொடர்பிலான பிரதானமான யூகங்கள் சிலவும் இருந்தது.

- வார்த்தை இல்லாத நாடகம் பற்றி இலங்கை இரசிகர்களின் பின்னூட்டம் எவ்வாறாக இருக்கும்?
- நடைமுறையிலிருக்கும் அரசின் அடிப்படை வேலைத்திட்டமாக செயற்படுத்தப்படும் நகர அலங்காரம் மற்றும் அதற்கு இணையாக மாற்றமடையும் உப கலாச்சாரத்தை தலைப்பாக கொண்டு நிர்மாணிக்கப்படுவது தொடர்பில் பிரச்சினைகள் எற்படுமா?
- வார்த்தைகள் இல்லாமல் இதை கட்டியெழுப்புவது எவ்வாறு?
- டிவைசின் (Devising) முறையை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆக்கத்தை கட்டியெழுப்ப முடியுமா?
- எவ்வாறாயினும் இறுதியில் ஜயம்பத்தியின் கருத்திற்கு அமைய நாட்டில் இடம்பெற்ற அரச கட்டுப்பாடு – சுய கட்டுப்பாடு -இராணுவமயமாக்கத்தின் முன்னால் மனிதர்களிடையே வார்த்தைக்கு உள்ள பலம் குன்றிப்போய் மௌனமாக எதையும் செய்யாத காரணத்தாலும் வார்த்தை இல்லாத நாடகத்தை உருவாக்கும் தேவை மற்றும் ருவன்தியின் கருத்திற்கு அமைய போரின் பின்னர் வேகமாக மாற்றமடைந்துவரும் இலங்கையின் புதிதாக கட்டியெழுப்பப்படும் உப கலாச்சாரம் பற்றிய உருவாக்கத்தின் தேவையை மையமாகக் கொண்டு “வோக்கிங் பாத்” எனும் “நடை பாதை” பற்றி வார்த்தை இல்லாத நாடகத்தை உருவாக்குவதற்கு ஸ்டேஜஸ் நாடக குழுவினர் தீர்மானித்தனர்.



# 03

## “வோக்கிங் பாத்”

வார்த்தை இல்லாத நாடகம்.
உருவாக்க செயன்முறையின் ஆரம்பம்,
கற்கை மற்றும் தகவல் சேகரிப்பு..

# முதலாவது படிமுறை

# வாழ்க்கையில் வார்த்தைகள் இல்லாத தருணத்தைத் தேடி

வார்த்தை இல்லாத நாடகத்தை உருவாக்கும்போது நடிகர்களை தெரிவு செய்வது தொடர்பில் ஏழு நாள் செயலமர்வு ஒன்று இடம்பெற்றது. அதில் நடிகர்களாக பிரதான (Main devising team) டிவைசின் குழு ஏழுபேரை உள்ளடக்கியுள்ளது. (அந்த குழுவில் அநேகமானோர் இதற்கு முன்னர் டிவைசின் செயன்முறைக்கு அமைய உருவாக்கப்பட்ட நாடக செயன்முறை அல்லது வார்த்தை இல்லாத நாடக உருவாக்கத்தில் தொடர்பு கொண்டவர்களில்லை என்பதை குறிப்பிடல் வேண்டும்.)

செயலமர்வின் முதல் சில நாட்களில் குழுவினரை வார்த்தை உபயோகிக்காத பல்வேறு சந்தர்ப்பங்களை கட்டியெழுப்ப உடனடி நடிப்பு (Improvisations) செயன்முறையில் ஈடுபடுத்தப்பட்டது. இதில் அடிப்படையாக மனித தொடர்புகள் பற்றிய சந்தர்ப்பங்கள் உடனடி நடிப்பு ஊடாக கட்டியெழுப்பப்பட்டது. அங்கே சைகை (Miming) வடிவத்தை பின்பற்றாமல் சாதாரண வாழ்வில் வார்த்தைகளை உபயோகிக்காது இருக்கும் சந்தர்ப்பங்களை கட்டியெழுப்புவதற்கு குழுவால் கவனம் செலுத்தப்பட்டது.

இதன் நோக்கம் விசேடமாக மென்மையான அசைவுகள் ,உணர்வுகள் மற்றும் தொடர்புகள் ஊடாக ஏதாவது கருத்துகளை கட்டியெழுப்புவதற்கு உள்ள தகுதியை வளர்த்தலாகும்.சில சந்தர்ப்பங்களில் வார்த்தையை மட்டும் அடிப்படையாகக் கொண்ட சில சம்பவங்களை கட்டியெழுப்பியதன் பின்னர் முறையாக அதிலுள்ள வார்த்தைகளை அகற்றிவிட்டு வார்த்தை இல்லாத தருணம் வரை அந்த சந்தர்ப்பத்தை கட்டியெழுப்பியுள்ளனர்.

# இரண்டாம் படிமுறை

## எண்ணக்கருவை விரிவாக்குதல்

நடைபாதை பற்றிய எண்ணக்கருவை குழுவுடன் கலந்துரையாடியதன் பின்னர் நடைபாதை பற்றி குழு அங்கத்தவர்களுக்கு தெரிந்த மற்றும் பார்த்துள்ள கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு உடனடி நடிப்பு செயன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டது. அங்கே பல்வேறு தலைப்புகளின் ஊடாக உடனடி நடிப்பு செயன்முறைகள் இடம்பெற்றதுடன் விசேடமாக நடமாடும் பாதையில் காணக்கூடிய உப கலாச்சாரம் மற்றும் அதனுள் மனித தொடர்புகள் பற்றி குழுவின் அடிப்படை கவனம் செலுத்தப்பட்டது.

- காதலர்கள்
- குழந்தைகள் மற்றும் பெற்றோரகள்
- ஓரினச்சேர்க்கை பாலியல் தொடர்புகள்
- கள்ளத் தொடர்புகள்
- நடமாடும் பாதையை பராமரிக்கும் குழு
- இராணுவம் மற்றும் மனிதர்களுக்கிடையிலான தொடர்புகள்
- மனிதர்களை கட்டுப்படுத்தும் முறை

போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் உடனடி நடிப்பு செயன்முறைகள் முன்னெடுக்கப்பட்டது. முதல் வாரத்தின் இறுதியில் குழு அங்கத்தவர்களுக்கு நடைபாதை தொடர்பில் உள்ள அறிவு மற்றும் அதன் கலாச்சாரம் பற்றிய அனுபவங்கள் குறைவானது என்பதை குழுவினர் புரிந்துக்கொண்டனர். குழு அங்கத்தவர்களினால் உடனடி நடிப்பின் மூலம் கட்டியெழுப்பப்பட்டிருந்த அதிகமான நடிப்புகள் சாதாரண வாழ்வில் இடம்பெறக்கூடிய சம்பவங்கள், நடைபாதையினுள்ளும் இடம்பெறாலாம் எனும் யூகங்களில் இருந்து முன்னெடுக்கப்பட்ட நடிப்பாகும். விசேடமாக குழுக்களிலிருந்த அதிகமானோர் இந்த நடமாடும் பாதையினுள் கட்டியெழுப்பப்பட்டுள்ள உப கலாச்சாரத்தை தழுவிய குழுவாகவோ அல்லது அதுபோன்ற இடங்களில் தினமும் நடமாடும் குழுவாகவோ இல்லாதிருப்பது இதன் காரணமாக அமைந்தது.

இக்காரணத்தால் குழு அங்கத்தவர்கள் அனைவரும் கொழும்பை சுற்றி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நடமாடும் பாதைகளுக்குச் சென்று அது தொடர்பில் நன்றாக கற்பது முக்கியமானது என்று தீர்மானிக்க-ப்பட்டது.

# மூன்றாவது படிமுறை
# நடைபாதை பற்றிய கற்கை

- சுதந்திர சதுக்க வளாகம்
- விஹாரமதேவி பூங்கா
- தியத்த பூங்கா
- தியவன்னா வோக்கிங் பாத்
- “ஏர்பன் வெட்லேன்ட் பார்க்” (நுகேகொடை)

குழு அங்கத்தவர்கள் காலையிலும் மாலையிலும் கொழும்பை சுற்றி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நடமாடும் பாதைக்குச் சென்று அங்கே மனிதர்களின் அசைவுகளை நன்றாக அவதானிப்பதற்கு ஆரம்பித்தனர். அந்த செயன்முறையானது இரண்டு பிரதான பிரிவுகளாக இருந்தது.

- நடமாடும் பாதையினுள் மனித அசைவுகளை கற்றுக்கொள்வது மற்றும் குறிப்பெடுத்துக்கொள்ளல்.
- காவலாளிகள், இராணுவ சிப்பாய்கள் மற்றும் மனிதர்களுடன் கலந்துரையாடலை முன்னெடுத்தல்.

# நடமாடும் பாதையினுள்
# மனித அசைவுகளை கற்றுக்கொள்வது மற்றும் குறிப்பெடுத்துக்கொள்ளல்

குழு அங்கத்தவர்கள் ஊடாக நடைபாதையுடன் தொடர்புடைய பிரச்சினைகள் கண்காணிக்கப்பட்டு விசேட பாத்திரங்களும் சம்பவங்களும் பட்டியலிட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

## சொகுசு வாகனம் மற்றும் முச்சக்கரவண்டி

- மிகவும் விலை உயர்ந்த சொகுசு வாகனங்களில் வருகை தரும் நபர்கள்
- சிறந்த பொருளாதார நிலையிலுள்ள நபர்கள் மாத்திரம் பாவிக்கக்கூடிய, உயர்ரக வாகனங்களில் வரும் நபர்கள் (அதிகமான பிரிவினர்.)
- முச்சக்கர வண்டி மற்றும் சைக்கிள்களில் வரும் நபர்கள் (குறைவான பிரிவினர்)

## பெருத்த சரீரங்கள் மற்றும் மெலிந்த சரீரங்கள்

- பெருத்த திருமணமான முதியோர் மற்றும் அவர்கள் பின்னால் ஓடும் மெலிந்த சிறு குழந்தைகள்
- மிகவும் கஷ்டத்ததுடன் ஓடும் அல்லது நடக்கும் இளைய பருவத்தில் உள்ள பெருத்த சிறுவர்கள்
- உடல் ஆரோக்கியத்திற்கான செயற்பாடுகளை முடித்துக்கொண்டு அந்த இடத்திலுள்ள சொகுசான உணவகங்களுக்குள் செல்லும் பெருத்த பெண்கள் மற்றும் ஆண்கள்
- பெருத்த வயோதிபர்கள் மற்றும் அவன் அல்லது அவளின் (தாத்தா / பாட்டி) உதவிக்கு தண்ணீர் போத்தல், டவல் ஒன்று, தொலைப்பேசியை எடுத்துக்கொண்டு பின்னாலேயே வரும் மெலிந்த உடலமைப்புடனான பணிப்பெண்கள்

## பெருத்த அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்பாளர்கள்

- பாதுகாப்புக் குழுவுடன் வளம் வரும் அமைச்சர்கள், மந்திரிகள்
- அமைச்சர்கள், மந்திரிகளுக்கு உடற் பயிற்சியை செய்வதற்காக உதவிபுரியும் பாதுகாவலர்கள்

## ஒழுக்கமான காதலர்கள் மற்றும் விசிலடிக்கும் காவலாளிகள்

- குடைக்கு உள்ளே அல்லது ஏதாவது பாதுகாப்புடன் மறைந்திருக்கும் காதலர்கள்
- காதலர்களை பார்த்துக்கொண்டிருக்கும் காவலாளிகள்
- காதலர்கள் முத்தமிடும்போது அதை தடுப்பதற்காக விசிலடிக்கும் காவலாளிகள்

## இளைய பெற்றோர்கள் மற்றும் சிறுவர்கள்

- புதிய பைசிக்கள், சக்கரங்கள் மாட்டப்பட்டிக்கும் பாதணிகள், பல்வேறு வடிவங்களில் உள்ள விளையாட்டு பொருட்களை உபயோகிக்கும் சிறுவர்கள்
- தொலைப்பேசியை அழுத்திக்கொண்டிருக்கும் அல்லது குழந்தைகளின் புகைப்படங்களை எடுக்கும் பெற்றோர்.

## ZUMBA DANCE மற்றும் நடனம்

- Zumba Dance வழிகாட்டும் தேகாரோக்கியமான அழகிய யுவதிகள் மற்றும் அவளை பின்பற்றுவதற்கு முயற்சி செய்யும் சரீர ரிதத்திற்கு ஏற்ப அசைவதற்கோ அல்லது கட்டுப்படுத்தவோ முடியாத நடுத்தர வயதுடைய பெண்கள் அல்லது ஆண்கள்.

## நாகரீக(ஃபேஷன்) யோகா மற்றும் யோகா

- சிறு குழுக்களாக யோகா செய்யும் பிரிவினர்
- தனித்தனியாக மரத்தடியில் ஒதுங்கி யோகா செய்யும் நபர்கள்

## இராணுவம்

- ட்ரெக் பொட்டம் (track bottam) டீ சேர்ட் (t.shirt) கென்வஸ் பாதணி (canvas shoe) அணிந்த கடமையில் ஈடுபடும் இராணுவ சிப்பாய்கள்
- தும்புத்தடி, ஈக்கிள்,குப்பை அகற்றும் ஏதாவது ஒன்றை கையில் வைத்துக்கொண்டு அல்லது பகல் வேலைகளில் மரத்தில் வாழும் காகங்களை விரட்டுவதற்காக கெட்டப்போல்லுடன்(உண்டிக்கோள்) இருக்கும் இராணுவ சிப்பாய்கள்

## சுதந்திரம் மற்றும் பொலிஸ்

- சுதந்திரமாக இருக்கும் மனிதர்கள் மற்றும் காதலர்களுக்கிடையில் சென்று அடையாள அட்டையை பரிசோதிக்கும் பொலிஸார்

## ஓடும் நாகரீகம் (ஃபேஷன்)

- விலை உயர்ந்த தரமான (Branded) sports, running kit மற்றும் பெரும்பாலும் லுமினெஸ் (Luminex) வர்ணங்களுடன் ஒன்றுடன் ஒன்று பொருத்தமாக உடுத்தும் இளைஞர் யுவதிகள்
- உடலில் அதிகமான பாகங்கள் தெரியும் வகையிலான விதத்தில் ஆடை அலங்காரத்தை வெளிக்காட்டும் பிரிவினர்
- நடப்பதற்கு கஸ்டப்படும் (நீளமான லுங்கி.நீளமான பாவாடைகள்,முஸ்லிம் ஹிஜாப் போன்ற) உடைகளை உடுத்தி நடக்கும் பெண்கள்.
- காலுக்கு அசௌகரியமான பாதணியை அணிந்து ஓடும் சில மனிதர்கள்

## செல்பி மற்றும் நடமாடும் ஹெட்செட்

- கெமராவுள்ள தொலைப்பேசியை கையின் மேலே தூக்கிக்கொண்டு நடக்கும் அல்லது ஓடும் மனிதர்கள்
- தானே தனது புகைப்படத்தை எடுக்கும் பிரிவினர்
- உடற்பயிற்சியின் இடையே தமது புகைப்படத்தை எடுக்கும் பிரிவினர்
- தொலைபேசியை அதிக நேரம் பார்த்துக்கொண்டிருக்கும் நபர்கள்.
- ஹெட் செட் (Headset) காதில் மாட்டிக்கொண்டு நடக்கும் அல்லது ஓடும் மனிதர்கள்.

## தனிமையில் உள்ள மனிதர்கள்

- தனித்தனியான உலகத்தினுள் வாழும் மனிதர்கள்
- அருகில் இருக்கும் நபர்களை பற்றி அதிக கவனம் செலுத்தாத மனிதர்கள்

## தடை செய்யப்பட்ட வியாபாரிகள்

- நடமாடும் பாதை ஓரங்களில் இருக்கும் வியாபாரிகள் (அச்சாறு / பலூன் / சிற்றுண்டி / இலைக்கஞ்சி போன்றன...)

# தடை பதாதைகள்

நடமாடும் பாதையினுள் “தடை” என்று குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தல் பலகைகளை அதிகமாக காணலாம்

புட்களை மிதிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

புகைத்தல் தடை

கீழே அமர்ந்திருப்பது தடை செய்யப்பட்டுள்ளது

நாய்களை கொண்டுவருவது தடை

ஒழுக்கமாக நடந்துக்கொள்ளுங்கள்

புகைப்படம் பிடிப்பது தடை

பிச்சை எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது

மரங்களை தொடுவது தடை

சைக்கிள் ஓட்டுவது தடை

வாங்குகள் மேலே கால் வைப்பது தடை

காரணமின்றி நடமாடுதல் தடை

வியாபாரம் செய்தல் தடை

இவ்விடத்தில் உணவு உண்ணுவது தடை

சத்தமிடுவது தடை

குப்பைகளை போடுவது தடை

# நடமாடும் பாதையினுள் கட்டியெழுப்பப்பட்ட கலந்துரையாடல்களின் தொகுப்பு

கீழே குறிப்பிடப்படுவது கற்கை செயற்பாடுகளில் நாடக குழுவின் அங்கத்தவர்கள் அனுபவித்த உண்மையான சம்பவங்கள் சிலவற்றுடன் அந்த இடத்தில் இருக்கும் மனிதர்கள்,காவலாளிகள் மற்றும் இராணுவ அங்கத்தவர்களுடன் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல்கள் சிலவாகும்.

சம்பவ இல. 01 (விஹாரமாதேவி பூங்கா)

விஹாரமாதேவி பூங்காவில் தொழில் புரியும் காவலாளியின் அனுபவம்.
ஒருநாள் அவர் தொழில் செய்துக்கொண்டிருக்கும்போது சொகுசு வாகனமொன்றில் வந்த நபர் ஒருவர் வாகனத்தை பாதை ஓரத்தில் நிறுத்திவிட்டு, விஹாரமாதேவி பூங்காவின் புட்கள் நிறைந்த பகுதியூடாகக் உட்புகுந்தார். அப்போது அங்கு கடமையில் இருந்த காவலாளியுடன் மற்றுமொரு பெருத்த காவலாளி அந்த வாகனத்தில் வந்த நபருடன் நடாத்தும் கலந்துரையாடல்

காவலாளி : இங்கே புட்களை மிதித்துச் செல்லக்கூடாது

நபர்: ஏன்

காவலாளி : இங்கே புட்கள் நடப்பட்டிருப்பது தெரியவில்லையா. இதை சிங்கப்பூர் போன்று செய்யப்பார்க்கிறோம்.

நபர் : ஆ.. நான் நினைத்தேன் நான் இருப்பது இலங்கையில் என்று

அந்த நபர் வேறு எதுவும் பேசாமல் மீண்டும் வாகனத்தில் ஏறி போய்விட்டார். எங்களுடன் கதைத்த காவலாளி “உண்மையில் எனக்கு வெட்கமாக இருந்தது ஐயா.என்ன செய்வது. எங்களுக்கு பணிக்கப்பட்ட வேலைகளை தானே நாங்கள் செய்கிறோம் என்று கூறினார்”

சம்பவம் இல 02 (சுதந்திர சதுக்கம்)

சுதந்திர சதுர்க்க வளாகத்தில் கற்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிங்க உருவத்தில் குழு அங்கத்தவர்கள் சிலர் கையை வைத்துக்கொண்டு கதைத்துக்கொண்டு இருந்தார்கள். அதனருகில் வந்த காவலாளி

காவலாளி : இது இருப்பது தொடுவதற்கு அல்ல. இது தேசிய மரபுரிமை

## சம்பவம் இல 03 (விஹாரமாதேவி பூங்கா)

விஹாரமாதேவி பூங்காவிற்குள் விசிலடிக்கும் சத்தத்தை எப்போதும் கேட்கலாம்.
அது காதலர்கள் முத்தம் கொடுக்கும் சந்தர்ப்பங்களை காவலாளிகள் கண்ட உடனேயே கேட்கும் விசில் சத்தமாகும். அது சம்பந்தமாக காவலாளியின் கருத்து

குழு அங்கத்தவர் : நீங்கள் ஏன் விசலடிக்கிறீர்கள்.

காவலாளி : விசிலடித்து கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவில்லையெனில் பெடியனும்,பிள்ளையும் துணியேதும் இல்லாமல்தான் இங்கே நடந்துக்கொள்வார்கள்.

குழு அங்கத்தவர்: இனி இவர்கள் இளைஞர்கள் தானே

காவலாளி : இளைஞர்கள் என்று குப்பையான வேலைகளை இங்கே செய்யவிட முடியாது. கலாச்சாரம் ஒன்று உள்ளது. மேலும் மற்ற மனிதர்களும் இருக்கிறார்கள். சிறுவர்களும் இருக்கிறார்கள்.எவ்வாறாயினும் பகல் இரண்டு மணிவரை மட்டுமே ஜோடிகளுக்கு இங்கே இருக்கமுடியும்.

குழு அங்கத்தவர் : அது ஏன்?

காவலாளி : சிறுவர்கள் மற்றும் குடும்பத்தினர் இங்கே வருவார்கள்.

குழு அங்கத்தவர் : அவ்வாறெனில் இளைஞர்களுக்கு மட்டும் போகக்கூடிய இடம் ஒன்றை அமைக்க வேண்டுமென்ற யோசனை வராதா?

காவலாளி : அது உண்மைதான். அப்போது எங்களுக்கும் வசதியாக இருக்கும். ஒரு பகுதியை மறைத்து மதில் கட்டி, அந்த இடத்திற்கு நல்ல பாதுகாப்பையும் கொடுத்து, மின் விளக்குகள் அதிகமாக பூட்டவும் வேண்டும் என்றார்

## சம்பவம் இல 04 (விஹாரமாதேவி பூங்கா)

விஹாரமாதேவி பூங்காவில் நாடக குழுவின் இரு அங்கத்தவர்கள் மற்றைய பெண் அங்கத்தவருடன் கீழே அமர்ந்து கலந்துரையாடிக் கொண்டிருந்தனர். ஆண்களில் ஒரு அங்கத்தவர் தண்ணீர் குடிப்பதற்காக வெளியேறினார். அத்தருணத்தில் விசில் சத்தம் கேட்டது.

காவலாளி : ஜோடிகளுக்கு கீழே அமர்ந்திருக்க முடியாது.

குழு அங்கத்தவர் : நாங்கள் காதலர்கள் இல்லை. நண்பர்கள்

காவலாளி : எங்களுக்கு தெரியாது தானே. எப்படியென்றாலும் கீழே அமர்ந்து கதைக்க முடியாது.

குழு அங்கத்தவர் : எங்களோடு இன்னுமொரு ஆணும் இருக்கிறார். நாங்கள் நாடகம் நடிக்கும் குழுவினர்.

(தண்ணீர் குடிக்க சென்ற அங்கத்தவர் மீண்டும் வருகிறார்)

காவலாளி :அப்படி கதைக்க வேண்டுமெனில் வேறு இடம் ஒன்றை தேடிக்கொள்ளுங்கள். இங்கே கீழே அமர்ந்திருக்க முடியாது.

குழு அங்கத்தவர் : இது புதுமையான கதையாக இருக்கிறதே. அப்படி சொல்வது யார்

காவலாளி : நாங்கள் எங்கள் வேலையை செய்கிறோம். ஏதாவது பிரச்சினைகள் இருப்பின் அரச பாதுகாப்பு அமைச்சிக்கு போய் கதையுங்கள்.

குழு அங்கத்தவர் : இப்போ நாங்கள் இங்கே கீழே அமர்வதற்கு அரச பாதுகாப்பு அமைச்சிக்கு கதைக்க வேண்டும். இல்லையா?

காவலாளி : நாங்கள் செய்வது எங்களுக்கு பணிக்கப்பட்ட வேலையை. தயவு செய்து வேறு இடம் ஒன்றை தேடிக்கொள்ளுங்கள்

## சம்பவ இல 05 (சுதந்திர சதுர்க்கம்)

நாடக குழுவில் சிலருடன் சுதந்திர சதுர்க்க கட்டிடத்தின் கீழே அமர்ந்துக்கொண்டு லெப்டொப் (மடிக்கணணி) திறந்து கலந்துரையாடலில் இருந்தோம். அந்த இடத்திற்கு வந்த காவலாளி

காவலாளி : இதற்குள்ளே கீழே அமர்ந்திருக்க முடியாது. லெப்டொப்பில் (மடிக்கணணி) வேலை செய்ய முடியாது.

குழு அங்கத்தவர் : அது ஏன்?

காவலாளி : இது தேசிய மரபுரிமைக்குட்பட்டது. இந்த இடத்தில் அமர்ந்திருக்க முடியாது. அமர்ந்திருக்க தேவையுள்ளவர்களுக்கு தான் கீழே வாங்குகள் செய்து வைக்கப்பட்டிருக்கிறது.

குழு அங்கத்தவர் : இது புதுமையான கதையாக இருக்கிறதே. இது சுதந்திர சதுர்க்கம். இங்கே சுதந்திரமாக இருக்க யாரிடம் அனுமதி வாங்க வேண்டும்?

காவலாளி : தயவு செய்து நீங்கள் எழுந்து கீழே போய் வீடுங்கள். இல்லையெனில் அரச பாதுகாப்பு அமைச்சகத்திற்கு போய் அனுமதி பெற்றுக்கொண்டு வாருங்கள்

## சம்பவ இல 06 (INDEPENDENT ARCADE)

நாடக பயிற்சி காலத்தில் நாடக பயிற்சி குழு அங்கத்தவர் ஒருவர் முச்சக்கரவண்டி ஒன்றில் தும்முல்லை திசையிலிருந்து பௌத்தாலோக்க மாவத்தை வழியாக பொரள்ளை திசைக்கு போவதற்கு இடையே புதிதாக நிர்மாணிக்கப்படும் இன்டிபென்டட் ஆர்கெட்டை (INDEPENDENT ARCED) கடக்கும்போது அவர் சாரதியுடன் சகஜமாக கதைக்க தொடங்கினார்.

குழு அங்கத்தவர்: அழகான இடங்கள் கொழும்பை சுற்றி அமைக்கப்படுகிறது இல்லையா?

சாரதி : அவை நாங்கள் போவதற்காக அமைக்கும் இடங்கள் இல்லை ஐயா

இவ்வாறு குழுவினர் பல வாரங்களாக பல்வேறு விதங்களில் நடமாடும் பாதையை அண்மித்து இடம்பெறும் உப கலாச்சாரம் பற்றிய கற்கையில் பெற்றுக்கொண்ட கருத்துக்களை உபயோகப்படுத்தி நடமாடும் பாதை அல்லது வோக்கிங் பாத் எனும் வார்த்தைகள் இல்லாத நாடக உருவாக்கம் செய்வதன் அடிப்படை பயிற்சிகளை ஆரம்பித்தார்கள்.

## சம்பவ இல 07 (சுதந்திர சதுக்கம்)

சுதந்திர சதுக்க கட்டிடத்தினுள் குழு அங்கத்தவர்கள் புகைப்படம் எடுப்பதற்கு ஆயத்தமானார்கள். அதனருகில் வந்த காவலாளி

காவலாளி : இங்கே படம் பிடிக்க முடியாது.

குழு அங்கத்தவர் : ஏன். அங்கே சிலர் படம் பிடிக்கிறார்களே.(திருமணமான ஜோடி எங்கள் அருகில் புகைப்படம் பிடித்துக்கொண்டிருந்தார்கள்.

காவலாளி : அவர்கள் அனுமதி பெற்றுள்ளார்கள்

குழு அங்கத்தவர் : எங்கே நாங்கள் அனுமதி பெற்றுக்கொள்வது

காவலாளி : அரச பாதுகாப்பு அமைச்சில்

சம்பவ இல 08 (URBAN WETLAND PARK- NUGEGODA)

Urban Wetland park (Nugegoda) உள்ளே சீமெந்தால் கட்டப்பட்டுள்ள மதிலில் அமர்ந்துக்கொண்டு நாடக குழுவின் அங்கத்தவர்கள் அவர்களின் நண்பர்களுடன் கதைத்துக்கொண்டிருந்தார்கள். கதையின் இடையே அவர்கள் பாதணிகளை கழற்றிவிட்டு இரு பாதங்களையும் அந்த மதில்மேல் வைத்தனர். சிறிது நேரத்தில்
கடமையிலிருந்த கடற்படை இராணுவ வீரர் அந்த இடத்திற்கு வந்தார். (சீருடையுடன்)
இராணுவ வீரர் : கால்கள் இரண்டையும் கீழே இறக்குங்கள்
குழு அங்கத்தவர் : ஏன்?
இராணுவ வீரர்: போட்(அறிவிப்பு பலகை) தெரியவில்லையா?
(அருகில் இருக்கும் பலகையை காண்பித்தவாறு)
“ஒழுக்கத்துடன் நடந்துக்கொள்ளுங்கள்”
“மதிலில் கால் வைப்பது தடை”


சம்பவ இல : 09 (தியவன்னா வோக்கிங் பார்த்)

கிம்புலாவல சந்தியில் வாகனம் நிறுத்தும் இடத்தில் நாடக குழுவின் அங்கத்தவர்கள் சிலர் இரவு 10.00 மணியளவில் கதைத்துக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்திற்கு பின்னர் ஜீப் வண்டி ஒன்று வந்த அவர்கள் அருகிலுள்ள பாதையில் நின்றது.அந்த வண்டிக்குள் மூன்று பேர் இருந்தார்கள். வண்டியில் இருந்தவர்கள் அவர்களை அழைத்தனர்.

முன்னால் ஆசனத்தில் இருந்த நபர் : இங்கே என்ன செய்கிறீர்கள்
குழு அங்கத்தவர் : சும்மா இருக்கிறோம்
முன்னால் ஆசனத்தில் இருந்த நபர் : சும்மா இருப்பதற்கு வேறு ஒரு இடத்தை தேடிக்கொள்ளுங்கள். இது உயர் பாதுகாப்பு வலயம். அநாவசியமாக இங்கே நடமாடக்கூடாது.

சம்பவ இல : 10 (சுதந்திர சதுர்க்கம்)

சுதந்திர சதுர்க்க சூழலினுள் இளவயது யுவதிகள் ஆறு பேர் பாஸ்கட் போல் (கூடைப்பந்து) விளையாடிக்கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்தில் பொட்டம் அணிந்த நபர் ஒருவர் அவர்களிடத்தில் வந்தார். அதன்பின்னர் விளையாடிக்கொண்டிருந்த யுவதிகள் தமது பைகளை எடுத்துக்கொண்டு அந்த இடத்தில் இருந்த வெளியேற தொடங்கினர். அப்போது நாடக குழுவின் அங்கத்தவர்கள் உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று அவர்களுடன் கதைத்தனர்.
குழு அங்கத்தவர் : அந்த நபர் என்ன சொன்னார்
யுவதி : இங்கே புட்களின்மேல் விளையாட கூடாது என்றார்
குழு அங்கத்தவர்: ஏன் என்று நீங்கள் கேட்கவில்லையா
யுவதி : ஐயோ தேவையற்ற பிரச்சினை தேவையா, நாங்கள் பல்கலைகழகத்திற்கு செல்கிறோம்.
குழு அங்கத்தவர் : நீங்கள் எந்த பல்கலைகழகம்
யுவதி : NIBM
குழு அங்கத்தவர்: உங்களுக்கு இந்த இடத்தில் விளையாடுவதற்கு உரிமை உள்ளது. அதை பற்றி பேசுங்கள்
யுவதி : கதைப்பதில் அர்த்தமில்லை.


04
“வோக்கிங் பார்த்”
வார்த்தை இல்லாத நாடகம்
பதினேழு இலக்கங்கள்
உள்ளடக்கப்பட்ட
நாடகமாக மாறியமை

“வோக்கிங் பாத்" - வார்த்தை இல்லாத நாடகம் பதினேழு இலக்கங்களை உள்ளடக்கிய மேடை நாடகமாகும். இந்த அத்தியாயத்தில் முதல் பகுதியாக இந்நாடகத்தின் பாத்திரங்களை கட்டியெழுப்புதல் மற்றும் நடிப்பை வடிவமைத்தல் பற்றி கலந்துரையாடல் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இரண்டாது பகுதியாக நாடகத்தின் டிவைசின் (Devising) செயன்முறைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது

# பாத்திரங்களை கட்டியெழுப்புதல்

“வோக்கிங் பாத் - வார்த்தை இல்லாத நாடகம் அதன் பாத்திரங்களை கட்டியெழுப்பும்போது மூன்று பிரதான குழுக்களில் ஒவ்வொருவரையும் வித்தியாசமான முறையில் இனங்காண்பதற்கு முடியும்.

## பிரதான நடிகர்கள் குழு

நடிகர்கள் ஐந்து பேரும் நடிகைகள் இருவரும் இந்த பிரதான நடிகர்களின் குழுவில் உள்ளடங்குவர். பிரதான குழு நடமாடும் பாதைக்கு வரும் பலதரப்பட்ட மனிதர்களை அடையாளப்படுத்துகின்றனர்.

## ARMY

ஆறு நடிகர்களை உள்ளடக்கிய இந்த குழுவினரால் போரை முடித்துவிட்டுவரும் இராணுவ வீரர்களிலிருந்து நடமாடும் பாதையை கட்டுப்படுத்தும் மற்றும் வழிநடத்தும் பிரிவு வரையிலான பாத்திரங்களை அந்த இலக்கங்களுக்கு ஏற்றவகையில் நடித்துகாட்டுவர்.

## வோக்கிங் பாத்தினுள் ஓடும் பிரிவினர்

இந்த பிரிவினரை நாங்கள் சந்திப்பது நாடகத்தின் முதல் இலக்கம் மற்றும் இறுதி இலக்கத்தில் மட்டுமேயாகும். இந்த பிரிவினர் இவ்வுருவாக்கத்தில் பிரதான பாத்திரங்களாக வெளிவருபவர்கள் இல்லை.

இவர்கள் ஊடாக அடையாளப்படுத்தப்படுவது ஒரே வடிவமாக நாட்டில் இடம்பெறும் எதையும் கேள்வி எழுப்பாது ஏற்றுக்கொண்ட மற்றும் நில்லாமல் ஓடும் சாதாரண மக்கள் பிரிவினராகும்.
இதில் உறுதிசெய்யப்பட்ட நிரந்தர பாத்திரங்கள் இல்லை.
அனைத்து பாத்திரமும் அடையாள பாத்திரங்களாவர்.
இலக்கத்திலிருந்து இலக்கமாக பாத்திரங்களின் தனித்துவம் மாற்றமடையும். நாடகத்தின் பிரதான கருப்பொருளுக்கு ஏற்றவகையில் பாத்திரங்கள் கட்டியெழுப்பட்டு இயக்கப்பட்டுள்ளது.

# நடிப்பை வடிமைத்தல்

“வோக்கிங் பாத்” - வார்த்தை இல்லாத நாடகத்தின் நடிப்பை வடிவமைக்க இரண்டு அடிப்படையான காரணங்கள் உள்ளது. அதாவது,

## நடமாடும் பாதையை பயன்படுத்தும் மனிதர்களின் நடவடிக்கைகள்

நடப்பது மற்றும் ஓடுவது

உடல் பயற்ச்சி

Zumba dance

யோகா மற்றும் தியானம்

சுத்தம் செய்தல்

பார்த்துக்கொண்டிருத்தல்

மனிதர்களின் சமூக வர்க்கம்

## நடமாடும் பாதைகளை பிரிக்கப்பட்டுள்ள விதம்

நடமாடுவதற்காகவே ஒதுக்கியுள்ள பாதை

மனிதர்கள் நடமாடும் திசை மற்றும் ஒழுங்குமுறை

உடல் பயிற்ச்சி பெற மற்றும் மனிதர்கள் ஒன்றாக நடமாடுவதற்கான இடங்கள் பிரித்து வைக்கப்பட்டுள்ளது.

பாதைகள் ஒன்றோடு ஒன்றாக தொடர்புபடுத்தி வைக்கப்பட்டுள்ளது.

போன்ற காரணிகளை அடிப்படையாக ஒவ்வொரு இலக்கத்திற்கும் ஏற்றவகையில் நடிகர்கள் மேடைக்கு உள்வரும் நேரத்திலிருந்து வெளியேறும் நேரம் வரை நடிகர்களுக்கு தேவையான பயணப் பாதைகள் ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்கமைவாக மேடையின் திரைச்சீலை ஊடாக முதலாவது,இரண்டாவது,மூன்றாவது மற்றும் நான்காவது பக்கத் திரையின் ஊடாக பாதைகள் இருப்பதாக மனதில் வைத்துக்கொண்டு நடிப்பு வடிவங்கள் கட்டியெழுப்பப்பட்டது. மேடைக்கு உள்வாங்கும் போது நடிகர்கள் அந்த பாதையை பயன்படுத்துவர்.

மேலும், கொழும்பு நகரத்தை சூழவுள்ள நடமாடும் பாதைகளையும் இராணுவத்தினரால் கட்டுமானப்பணிகளை முன்னெடுக்கப்படுவதையும் மற்றும் பராமரிப்பதையும் அடையாளப்படுத்தி இராணுவ அங்கத்தவர்களாக நடிப்பை முன்வைக்கும் பிரிவினர் மூலம் அனைத்து பின்னனி ஒளிப்பதிவுகளும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.


FIRE EXIT

# உருவாக்கத்தில் டிவைசிங் (Devising) செயன்முறை

## "வோக்கிங் பாத்"
## வார்த்தை இல்லாத நாடகம்

பயிற்சி செயன்முறை மற்றும் பதினேழு இலக்கங்கள் அடங்கிய காட்சிகளை கட்டியெழுப்பிய விதம்.

இந்த உருவாக்கத்தின் டிவைசிங் (Devising) செயன்முறை, பயிற்சி செயன்முறைக்கு இணையாக நடாத்தப்பட்டது. நாடகத்தில் கலந்துரையாடப்படும் கருப்பொருளுக்கு தொடர்பில்லாதது என்று தோன்றும் நடிப்பு மற்றும் நடிப்பு பகுதிகள் அகற்றப்பட்டுள்ளது.இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்படுவது நாடகத்திற்காக இறுதியாக இணைத்துக்கொள்ளப்பட்ட நாடக பகுதிகள் பதினேழு பற்றி மட்டுமாகும்.



# SCENE 1 கெட்ட காலம் முடிந்துவிட்டது! புதிய யுகத்தின் விடியல்!

## எண்ணக்கரு

30 வருடகால போர் முடிவுகளுடன் புதிய யுகத்தின் ஆரம்ப அறிகுறிகளுடன் இராணுவ வீரர்களை மகிமைப்படுத்தி, துரிதமாக உருவாக்கப்பட்ட நகர சூழலை சுற்றி அலங்காரமான புதிய இணை கலாச்சாரத்தை எவ்வித சந்தேகமுமின்றி பிரஜைகள் ஏற்றுக்கொண்டனர்.

ஆம். உண்மையாகவே இது புது யுகத்தின் ஆரம்பமாகும்...

## காட்சியின் சுபாவம்

நாடக ஆரம்பத்தில் திரை நீக்கம் செய்யப்படுவதுடன் பார்வையாளர்களுக்கு பார்க்கக்கூடியதாக இருப்பது, துப்பாக்கியால் சுடுவதற்காக வரிசைப்படுத்தி வைத்திருந்த பயந்த சுபாவத்தினுடனான மனிதர்களின் ஒரு பிரிவினராகும். அடுத்த நொடியில் சூடுபட்டு உடல் துடித்துக்கொண்டிருப்பது மனித உயிர்களாகும். அதன்பின்னர் அந்த வெடிச்சத்தம். பின்னர் பட்டாசு சத்தமாகவும் பலூன் வெடிக்கும் சத்தமாகவும் மாற்றமடைந்தது. பலூனை கையில் எடுத்தவர்களுடன் நீர் துப்பாக்கியை கையில் எடுத்துக்கொண்டு சிரித்த முகத்துடன் முன்னோக்கி செல்லும் இரராணுவ பிரிவினரின் காட்சியாகும். பயத்துடன் இருந்த மனிதர்கள் போரின் முடிவை வெற்றிகரமாக கொண்டாடுவதுடன் பின்னால் திரும்பி பார்க்கும்போது அவர்கள் காண்பது நடமாடுவதற்கும் சிறந்த உடற் பயிற்சிக்காகவும் கட்டப்பட்டுள்ள அலங்காரமான இடங்களையாகும்.

## உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்

கீழே குறிப்பிட்டுள்ள காரணிகளை அடிப்படையாகக் கொண்டு உடனடி நடிப்பு செயன்முறைகள் கட்டியெழுப்பப்பட்டது. நாடக வடிவமைப்பு மற்றும் அதன் தன்மையை ஆய்வாளரிடம் கொண்டு செல்வதையே இந்த இலக்கத்தால் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய,

- போரை முடித்துவிட்டு வந்த இராணுவத்தினருடன் சாதாரண மக்கள் முன்னெடுக்கும் தொடர்புகள் எவ்வாறானது?
- தெரியாத புதிய கலாச்சாரத்திற்கு இழுத்து சென்ற பிரிவினரின் நடவடிக்கைகள் எவ்வாறானது?
- நடமாடும் பாதைகளில் பழக்கமில்லாது முறையற்ற விதங்களில் ஓடும் மனிதர்கள் மற்றும் மிகவும் பழக்கத்துடன் முறையாக ஓடும் மனிதர்களின் நடவடிக்கைகள் எவ்வாறானது?



# SCENE 2 திறந்தவெளி... இலவச உறவுகள்

## எண்ணக்கரு

புதிய சுதந்திர நிலைமையுடன் ஏற்படும், நொடிக்கு நொடியான மாற்றம், வெளிப்படையாகத் தெரியும் புதிய வகையிலான மனித தொடர்புகளால் உருவாகியுள்ள,மனித சமூகத்தின் ஆரம்பம்.

சுதந்திரத்தின் மத்தியில் முன்னெடுக்கப்பட்டுள்ள கள்ளத் தொடர்புகளின் சுதந்திரம்.

## காட்சியின் சுபாவம்

புதிதாக கட்டப்பட்டுள்ள புதிய இடங்களில் தனித்தனி நபர்கள் படிப்படியாக மற்றவர்களுடன் முன்னெடுப்பதற்கு தயாராகும் புதிய தொடர்புகளின் ஆரம்பத்தை இங்கே காணலாம். குறுகிய காலத்திற்காக இதுபோன்ற இடத்தை பாவித்து உடற்பயிற்சியை மேற்கொண்டு, வெளியேறுவதாக இதில் நடித்து காட்டப்படுகிறது. உடற்பயிற்சியில் காணக்கூடிய மீண்டும் மீண்டும் ஒன்றையே நிகழ்த்தும் குணாம்சத்தை இந்த நடிப்பில் அதிகமாக காணலாம். அதை மீண்டும் மீண்டும் செய்வதினூடாக அந்தந்த சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் உணர்வுகள் மாற்றமடைவதையும் அதில் வெளியாகும் அர்த்தங்கள் மாற்றமடைவதையும், மனிதர்கள் கண்களினூடாக தொடர்புகளை மாற்றமடைய செய்வதையும் இதில் கண்டுக்கொள்ளலாம். நடிகர்களில் இருவர் இருவராக நடிப்பினுள் ஒருமுறை மட்டும் தொடர்புகளை கட்டியெழுப்புவதுடன் ஒரே உணர்வினை இருமுறை பயன்படுத்துவதில்லை.

## உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்:

- மற்றொருவரின் கவனத்தை பெற்றுக்கொள்வதற்காக செய்யும் உடற்பயிற்சிகள் என்ன?
- அசைவு மற்றும் மௌனங்களுக்கிடையிலான தொடர்புகள் போன்று வேகத்தின் மாற்றத்தினூடாக உணர்த்துவது என்ன?
- ஒரே நிலைப்பாட்டில் உள்ள உடற்பயிற்சியினூடாக அர்த்தங்களை கட்டியெழுப்ப முடியுமா?



# SCENE 3 சிங்கத்தை மாற்றியது யார்? Grrr

## எண்ணக்கரு

உங்களுக்கும் எனக்கும் நன்றாக தெரிந்த சிங்கள இனத்தின் அடையாளமான சிங்க உருவம் படிப்படியாக கம்பீரமான குரலில் அனைத்திற்கும் மேலாக கர்ஜனையுடன் எதிரொலிக்கும் போது, எனதும் உங்களதும் குரலுக்கும் சுதந்திரத்திற்கு உள்ள பெறுமதி. சுதந்திர அவகாசத்தினுள்ளே வரையறை செய்யப்படலாம்.

"சுதந்திர" சதுர்க்கத்திற்கு புதிய அர்த்தம்.

## காட்சியின் சுபாவம்

சுதந்திர சதுர்க்க சூழலிலுள்ள சிங்க சிலையை பின்பற்றி ஒரு நடிகர் மேடையின் நடுவில் இருந்தார். அதற்கருகில் வரும் மனிதர்கள் மீது இச்சிங்கம் இதற்கு முன் காட்டிய எதிர்நடவடிக்கை மாற்றமடைந்துள்ளது தெரிகிறது.

சிங்க சிலை கர்ஜிக்க ஆரம்பிப்பது, படிப்படியாக சிங்கத்தின் குரலொலி எதிரொலியாக கேட்பதிலிருந்து இராணுவ ஆணையை பெற்றுக்கொடுக்கும் விசில் சத்தம் வரையிலான இராணுவமயமாக்கம் ஆரம்பமாகுதல் படிப்படியாக முன்னேற்றமடைகிறது.

இந்த சுதந்திரமான நிலைமைக்குள் இடம்பெறக்கூடிய பயங்கரமான மட்டுப்படுத்தலான சுபாவங்கள் மேலெழும்புவதை இந்த இலக்கத்தின் முடிவினில் கண்டுக்கொள்ளலாம்.

மேடைக்கு முன்னால் வலது பக்கத்தில் மட்டும் நடக்ககூடிய ஒழுக்கத்தை கடைப்பிடிக்கும் விதத்திலான நடிப்பு முன்னெடுக்கப்படுகிறது.

## உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்:

- சிங்க சிலையுடன் சாதாரண மனிதர்களுக்கு ஆரம்பத்தில் இருந்த தொடர்புகள்?
- சிங்க சிலையை தொடுவதை தடை செய்ததன் பின்னர் ஏற்பட்டுள்ள தொடர்புகள்.?



# SCENE 4 கடைசி நேரம் வரை காட்சி

## எண்ணக்கரு

புகழாரம் சூடும் இராணுவ வீரர்களின் ஒழுக்கமானது, சுத்தம் செய்யும் தொழிலாளியின் வேலையாக மாற்றம் அடைவதுடன் இறுதி துகில் வரையில் சுத்தமாகும் சுதந்திர அவகாசம். சுத்தத்தை மையப்படுத்தி மூடிமறைக்கும் ஆட்சியின் அதிகார அழுக்கு...

## காட்சியின் சுபாவம்

மனிதர்கள் நடமாடும் பாதைக்கு வருவதற்கு முன் அந்த இடம் இராணுவத்தினால் சுத்தம் செய்யப்படுகின்றது. அவர்கள் தொழில் ரீதியாகவும் ஒழுக்கத்துடனும் சுத்தம் செய்யும் விதத்தினை இங்கே காணலாம்.

### உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்:

- இராணுவ வீரர்கள் துப்பாக்கிக்கு பதிலாக சுத்தம் செய்யும் பொருட்களை கையில் வைத்துக்கொண்டு இருக்கும் விதம் எவ்வாறானது?
- சுத்தம் செய்யும்போது எற்படும் ஒருநிலையான தன்மை மற்றும் அவர்களின் தன்மானம் அவர்களினுள்ளே படிப்படியாக குறைந்துப்போகும் போது என்ன நடக்கும்?



## SCENE 5

# ஜாக்கிரதை... பறவைகள்

### எண்ணக்கரு

செய்யும் தொழிலே கடவுள் என்றாலும்,தனிமைப்படுத்தப்பட்ட நேரத்தில் இராணுவ வீரருக்கு சாதாரண மனிதனாக சிந்தனைகள் பிறக்கக்கூடும் ஆனால், ஆட்சியாளர்களுக்கு அது எப்போதும் உருவாகாது.
மனிதத்துவத்திற்கு உள்ள வரையறை....

### காட்சியின் சுபாவம்

பகல் காலம் முழுவதும் மரத்தடியில் தனியாக கடமையில் ஈடுபடும் ஒரு இராணுவ வீரன், பறவைகளுடன் தொடர்பினை ஏற்படுத்த முயற்சிப்பார். மூன்றாம் தரப்பினர் ஒருவர் பறவையை விரட்டியடிப்பதற்கு மேற்கொள்ளும் மிரட்டலான விசில் சத்தமானது இராணுவ வீரரையும் குறிவைக்கும்..

### உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்:

- இராணுவ வீரருக்கு கடமையில் ஈடுபடும்போது வெளிப்புற தொடர்புகளை கட்டியெழுப்புவதற்கான வசதிகள் இருக்கிறதா?



# SCENE 6 அது நான் அல்ல!

## எண்ணக்கரு

எந்த வகையான மனித தொடர்புகளோ, நடவடிக்கையோ அல்லது மனித உணர்வுகளோ மிரட்டலான விசில் சத்தத்தின் மூலம் கட்டுப்படுத்தக்கூடிய, வெளியே புலப்படாத ஆட்சி அதிகாரம் என் போன்றவர்களின் கட்டுப்பாடு எனது பொறுப்பாகும்.

## காட்சியின் சுபாவம்

காதலுடன் மேடையின் உள்ளே வரும் நான்கு ஜோடிகள். அந்த குழுக்களுக்காக தெரிவு செய்த தெளிவான சில தருணங்கள் (கை பிடிப்பது, நெருங்குவது, முத்தமிடுவது, அணைத்துக்கொள்வது, அருகில் இருப்பது போன்ற...) அதை நிறுத்துவதற்கு விசிலடிப்பதன் மூலம் ஆணையிடப்படும். அதன் ஊடாக அவர்களின் தொடர்புகளுக்கு ஏற்படும் தடைகள் மற்றும் மாற்றங்களை காணலாம்.

இராணுவத்தின் அதிகாரத்திற்கு முன் காதலர்கள் காலப்போக்கில் இதுபோன்ற செயற்பாடுகள் காரணமாக எவ்வித விசாரணையுமின்றி மனிதர்களால் சுய கட்டுப்பாட்டிற்கு வரும் விதத்தை நடிப்பின் மூலம் வெளிக்கொண்டு வரப்பட்டது.

### உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்:

- பொது இடங்களில் காதலிக்கும்போது இடம்பெறக்கூடிய நடவடிக்கைகள் என்ன?
- தனி இராணுவ வீரருடன் அநீதிக்கு எதிராக முன் வருவது எவ்வாறு?
- இராணுவ வீரர்கள் அதிகமாக இருக்குமிடத்தில் அநீதிக்கு எதிராக முன் வருவது எவ்வாறு?



**SCENE 7** ‘ஜிங் ஜிங் தாரா’ - நானும் எனது தொலைபேசியும்

## எண்ணக்கரு

மனித தொடர்புகளில் சமநிலை,வரையறைகள், மற்றவர்களின் சுதந்திரம் அல்லது தடை செய்வதற்குள்ள உரிமை,அனைத்தும் பாவனையில்லாத தொலைப்பேசியொன்று உயிர்பெறுவதுடன் நொடிக்கு நொடி மாற்றமடையும் மனித நடவடிக்கைகள் என்னை கட்டுப்படுத்தும் தொலைப்பேசி..

## காட்சியின் சுபாவம்

இந்த காட்சி இரண்டு பகுதிகளாக உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் முதல் பகுதியின் மூலம் Zumba (சும்பா) நடனத்தை வழிநடத்தும் பெண்ணின் தொலைப்பேசி தொடர்ச்சியாக ஒலிப்பது மற்றும் அவளை பின்பற்றி சிலர் அதற்கு மறுமொழி காட்டுவதை காணலாம்.
இரண்டாவதாக சுதந்திர நிலையில் தியானம் செய்யும்போது கைத்தொலைப்பேசியில் வெளிவரும் பல்வேறு ஒலிகளால் (ringing tone, message tone) மனிதர்கள் ஏற்றுக்கொள்ளும் அல்லது ஏற்றுக்கொள்ளாத சந்தர்ப்பங்கள் மற்றும் நொடிக்கு நொடி தொலைப்பேசியில் மட்டுமல்லாது மனிதர்களின் நடவடிக்கைகளாலும் மற்றவர்களின் சுதந்திரத்திற்கு ஏற்படும் தடைகளை வெளிக்காட்டுவதை காணலாம்

### உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்:

- Zumba dance கலாச்சாரத்தில் மனிதர்களின் நடவடிக்கைகள் எந்த விதத்தில் அமையும்?
- தியானம் செய்யும்போது கைத்தொலைப்பேசியின் ஊடாக ஏற்படும் தடைகள் எவ்வாறானது. ?



# SCENE 8

# நினைவகம் பழமையானது

## எண்ணக்கரு

போரின் துயர நினைவுச்சின்னங்கள் ஆபத்தானவை அல்லது குறைந்தளவில் தடை ஏற்படுத்துவதாக இருக்கும் பட்சத்தில், அலங்காரம் அல்லது சுத்தம் செய்தல் எனும் நோக்கில் இந்த நினைவு சின்னங்களை அகற்றி,வெள்ளை நிறங்களை பூசி சரளமாக,பளிச்சிடும் சின்னங்களாக மாற்றம் செய்வதூடாக ஆட்சியை நடைமுறைப்படுத்துவதை இலகுபடுத்துகிறார்கள் போர் நிறைவடைந்துவிட்டது.

## காட்சியின் சுபாவம்

தனிமைப்படுத்தலின் ஊடாக கடந்த ஞாபகங்களை மீட்டிப்பார்க்கும் இராணுவ வீரர் ஒருவர் சிதைந்துப் போன ஒரு சிலையின் பக்கம் இருப்பதாக நடிப்பு ஆரம்பமாகிறது. அந்த ஞாபகங்களுக்கிடையில் அவரின் கடமையும் தனிமையிலும் தனிமைப்படுத்தப்பட்ட கடமையாக நடாத்தி செல்லப்படுகின்றது.

இராணுவத்தினரின் ஞாபகங்களை அதுபோன்ற இராணுவ குழுவினர் வந்து மாற்றமடைய செய்வது மற்றும் அந்த ஞாபகங்கள் நிறைந்த சின்னங்களுக்கு பதிலாக ஓடும் ஒரு நபரின் சின்னம் ஒன்று கட்டியெழுப்பியுள்ளதை காணலாம்.

ஞாபகங்களை அகற்றுவதன் மூலம் சில தரப்பினருக்கு ஏற்படும் நலிவுற்ற தன்மை மற்றும் ஒன்றும் செய்ய முடியாத நிர்க்கதியான நிலையை இங்கே காணலாம்.

## உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்:

- தனியாக கடமைபுரியும் இராணுவ வீரருக்கு சிதைந்து வீழ்ந்த சிலையுடன் இருக்கும் தொடர்பு எவ்வாறானது?
- புதிதாக நிர்மாணிக்கப்படும் நினைவுச்சின்னங்கள் மற்றும் மனிதர்கள் நடமாடும் இடங்களை சுற்றி குழுக்களாக ஒன்று சேர்ந்து புகைப்படம் எடுத்து மகிழும் விதம் எவ்வாறானது.?



## SCENE 9

# எனது நண்பர்களுடன் எனது செல்ஃபி

### எண்ணக்கரு

சைபர் தளத்தில் கவர்ச்சிகரமான, உத்வேகத்துடன், இன்முகத்துடன் நித்தமும் புதிய ஏதாவதொன்றை கண்காணிக்கும் மூச்சின் ஒலி கேட்கும் தூரத்தில் இருக்கும்போதும், விலகிச் செல்லும் மனித கலாச்சாரத்தின் புகைப்படம்
'selfish' சமூகத்தின் selfie ஒன்று...

### காட்சியின் சுபாவம்

காட்சி ஆரம்பிக்கும்போது எந்தவொரு தொடர்புமில்லாத ஜோடி ஒன்றை காணலாம். மூன்றாம் நபர் மேடைக்குள் உள்நுழைவார். அவர் தொலைப்பேசி ஊடாக சிறு தகவல் ஒன்றை அனுப்புவார்.மௌனமாக இருந்த இருவரும் செயற்படுவர். படிப்படியாக மக்கள் கூடுவார்கள். அவர்களின் அனைத்து தொடர்புகளும் தொலைப்பேசியை அடிப்படையாக கொண்டே இடம்பெறும்.
படிப்படியாக selfie படம் பிடித்தல் மற்றும் அதை மற்றவர்களுடன் பகிர்ந்துக்கொள்வது ஆரம்பிக்கப்படும். அங்கே உள்ள ஒவ்வொருவரையும் கடந்து செல்லும் சுபாவம் மற்றும் அங்கேயுள்ள ஒரு நிலைப்பாட்டையும் காணலாம்.

### உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்:

- கைத் தொலைப்பேசிக்கு அடிமையான மனிதர்களின் நிழல் எவ்வாறானது?
- Selfie பிடிக்கும் பல்வேறு முறைகள் மற்றும் மற்றவர்களின் கவனத்தை பெற்றுக்கொள்வதற்காக செய்யும் செயற்பாடுகள் என்ன?
- மனிதர்களுக்கு மறுமொழி காட்டும்போது காணக்கூடிய போலியாக சிரிக்கும் முறைகள் எவ்வாறானது.?



# SCENE 10 நகரிலுள்ள செக்ஸ்

## எண்ணக்கரு

பொது இடத்தில் ஒழுக்கம் மற்றும் கண்ணியம் பற்றியுள்ள வரைவிலக்கணம், பாலியல் மற்றும் காதலை வெளிப்படுத்துவதற்கு உள்ள தடைகளுக்கு முன் உத்தியோகபூர்வமற்ற, காட்சிப்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் நடைமுறையிலிருக்கும் வரையறையும் கடந்து செல்வதற்கு துணை கலாச்சாரத்திலுள்ள இடம் மற்றும் தேவைகள்

Sex ... (உடலுறவு) ஒரு உடற்பயிற்சியாகவும் இருக்கலாம்...

## காட்சியின் சுபாவம்

மனிதர்களின் ஈர்ப்பு, பாலியல் மற்றும் உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய வகையில் காட்டப்படும் உடற்பயிற்சிகளை நாடகம் முழுவதிலும் காணலாம்.
இவ்வாறான முறையில் நடந்துக்கொள்ளும் மனிதர்களை பார்த்துக்கொண்டு இருக்கும் மனிதர்களின் செயற்பாடுகள் போன்று காட்சிப்படுத்தும் காமத்தில் உள்ள நகைச்சுவைத் தன்மை இந்நாடகத்தில் இடம்பிடித்துள்ளது.

### உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்:

- பாலியல் உணர்வுகள் வெளிக்காட்டப்படும் விதத்தில் இடம்பெறக்கூடிய உடற்பயிற்சிகள் என்ன?
- உடற்பயிற்சிகள் இரண்டினை ஒன்று சேர்ப்பதன் மூலம் வேறு அர்த்தத்தை கட்டியெழுப்பக்கூடிய சந்தரப்பங்கள் உள்ளதா?



# SCENE 11 பேற்றரி குழந்தைகள்

## எண்ணக்கரு

சுதந்திரத்தைத்தேடி செல்லும் போட்டித்தன்மையுள்ள மனிதர்கள் உருவாகும் புதிய சந்ததியினரின் வரையறை.
சிதறிய நவீன குடும்பங்கள்

## காட்சியின் சுபாவம்

காட்சி ஆரம்பத்திலேயே காணக்கூடியதாக இருப்பது மேடையின் இடையே ஓடும் ரிமோட்(தானியங்கி) கார் ஒன்றாகும்.. அதன் பின்னர் படிப்படியாக கார் ஓட்டும் மனிதர்களை காணமுடியும். அவர்களுக்கும் அந்த கார்களுக்கும் இடையே உள்ள தொடர்புகளானது குழந்தைகள் மற்றும் பெற்றோருடன் இருக்கும் தொடர்பு போன்றதாகும்.

பிரிந்து வாழும் ஜோடி ஒன்று தமது குழந்தையை (கார் ஒன்று)மாற்றிக்கொள்வது போன்று காணலாம். குழந்தையின் நடவடிக்கை,திணரும் சுபாவம், பிடிவாதத்தன்மை,அழுவது போன்றவைகள் ரிமோட் காரினால் வெளிவரும் சத்தத்தை உபயோகப்படுத்தி வெளிப்படுத்துவதை காணலாம்

மேடையின் பின்னால் கார் பந்தயம் (Car race) ஒன்றை நடாத்தும் பிரிவினர் இருப்பதுடன் அங்கே கார்கள் குழந்தைகளாக அடையாளப்படுத்தப்படுகிறது. அதில் கார்களை கொஞ்சுவது மற்றும் குட்டுவது போன்றவற்றையும் காணலாம்.

## உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்:

- பெற்றோர்களின் போட்டித்தன்மையை எந்த முறையில் காண்பிக்கலாம்?
- முதியோர்களின் தொடர்பில் உள்ள இடைவெளி மற்றும் குழந்தைகளுடன் உள்ள இடைவெளியையும் காட்டக்கூடிய வழிமுறைகள் எவ்வாறானது?



# SCENE 12 அத்தனை சத்தத்திற்கும் பிறகு

## எண்ணக்கரு

கட்டுப்படுத்த எவரும் இல்லாத நேரத்தில் கட்டுப்படுத்தும் பிரிவினரை பார்த்துக்கொண்டிருப்பதற்கும் ஒருவருமில்லாத, மௌனத்துடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ள இராணுவம். தனிமையான பாதையில் கடமைபுரியும் தனிமைப்பட்ட மனித உடல்கள்...

## காட்சியின் சுபாவம்

இங்கே இருப்பது மிகவும் குறுகிய நடிப்புக்கள் சிலதாகும். இராணுவத்தினரால் பின்னனியை பலமுறை மாற்றம் செய்ததுடன் அவ்வாறு மாற்றம் செய்யும் நேரத்தில் (black out) ஒன்றுக்கு பின் இடம் மாற்றம் செய்வதை காணலாம்.
இராணுவ வீரர்களின் உடல் அசைவில் சோர்வுற்ற சுபாவம் மற்றும் ஒருநிலைப்பாடு முழுக்காட்சியிலும் இடம்பெறுகிறது.

## உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்:

- கடமைக்காக எந்த ஒரு கடமையும் இல்லாது தனியாக இருக்க நேர்ந்தால் என்ன செய்வது?



# SCENE 13 எனது தொலைபேசியில் உலகம்

## எண்ணக்கரு

பொது சமூகத்தினருடன் இருக்கும்போது  கடைபிடிக்கும் ஒழுக்க நெறிமுறைகளுக்கு சவாலை ஏற்படுத்தும் தொழிநுட்பத்தின் மூலம் , வேறுப்பட்ட வரப்பிரசாதங்களுக்கு உரிமையுள்ளோராக, தனித்தனி உலகத்தினுள் இரகசியமாக கேட்கும் ஏதோவொரு சத்தத்துடன் நடக்கும், ஹெட்போன் (headphones) மாட்டிய  எவ்வித பிரகாசமுமற்ற  மனித முகங்கள் எமக்கு பக்கத்தில் நிதமும் நடமாடுகிறது. வெளியில் தோன்றும் மௌனத்துடன் நடந்துக்கொள்ளும் உள்ளகப் பூடகமான ஓலம்…

## காட்சியின் சுபாவம்

மனிதர்கள் ஹெட்போன் (headphones)  மாட்டிக்கொண்டு தனது இரசணையின் படி எதையோ கேட்டுக்கொண்டு அல்லது கடமையின் நிமித்தம் ஏதாவது செய்துகொண்டு பழக்கப்பட்ட வாழ்க்கை வட்டத்தை நடாத்தி செல்ல முயற்சிப்பதை இங்கே காணலாம். அவர்கள் கேட்பது என்னவென்று பார்வையாளர்களும் கேட்பதுடன் அவர்களின் நடவடிக்கை,செயற்பாடு மற்றும் தொடர்புகளிலுள்ள குழப்பங்கள் மேலெழும்புவதையும் காணலாம்.

## உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்:

- ஹெட்போன் (headphones) மூலம் கேட்பவைகள்?
- ஹெட்போன் (headphones) மாட்டிக்கொண்டு ஓடும் அல்லது நடக்கும் முறை மற்றும் பாத்திரத்தின் பண்புகள் என்ன?



# SCENE 14

# ஓடும் பாதையில் கால்தடம்

## எண்ணக்கரு

இரண்டு பாதணிகள் இருந்தால் மட்டும் நடப்பதற்கு தகுதி பெறுவதில்லை எனும், சமூக வர்க்கத்தை பிரிப்பதற்கு கட்டப்படும் கண்ணுக்கு தெரியாத மதில்களுக்கு முன்னால், மௌனமாக, தூரத்தில் தமது வரையறையிலிருந்து பார்த்துக்கொண்டிருக்கும் வறிய மக்கள்: மத்திய வர்க்கத்தினராவர் கனவுகளை சுமந்து ஓடும் மனிதர்களின் பாதணிகளுக்கு தன்னை அறியாமல் மீண்டும் மீண்டும் மிதிக்கப்பட்டு பின்னோக்கி தள்ளப்படுகின்றனர்.
வேகம் மற்றும் வர்க்கத்தை நடைமுறைப் படுத்தும் போட்டியின் முன்னால், மத்திய வர்க்கத்தினரின் நடமாடுவதற்கு உள்ள விசர்த் தன்மை...

## காட்சியின் சுபாவம்

பாதணிகள் இல்லாது நபர் ஒருவர் நடமாடும் பாதையில் உட்பிரவேசித்து இருப்பதுடன் அவருக்கு அங்கே எந்தவொரு இடமும் அமர்வதற்கோ அல்லது உபயோகிப்பதற்கோ வசதியாக இல்லை என்பதை காணமுடிகின்றது.
அவர் மீது அந்த இடத்தில் இருந்த யாரும் கவனம் செலுத்தாததும், மீண்டும் பாதணியுடன் அவர் வந்தாலும் அவர் அந்த சமூக பிரிவிற்குள் பொருத்தமற்றவர் என்று புரிந்துக்கொள்வதால் ஏற்படும் தாக்கத்தின் முன் அந்த இடத்திலிருந்து வெளியேறும் பாத்திரமாக உருவாக்கப்பட்டது.

## உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்:

- ஓடுவதற்காக பாவிக்கும் பாதணிகள் இல்லாமல் நடமாடும் பாதைக்கு வரமுடியுமா? பாதணி இல்லாத நபர் ஒருவர் நடமாடும் பாதையினுள் இருப்பதை காணும் மனிதர்களின் பின்னூட்டம் என்னவாக இருக்கும்?

- தனக்கு பொருந்தாத இடம் என்று அறிந்து அவ்விடத்திற்குள் உள்நுழையும்போது அந்நபர்களினுள் ஏற்படக்கூடிய போராட்ட சுபாவம் எவ்வாறானது?



# SCENE 15

# ‘ஏதோ’ தடைசெய்யப்பட்டுள்ளது

## எண்ணக்கரு

சுதந்திரமான அவகாசத்திற்குள் எதுவும் தடை செய்யப்படலாம் எனும் சந்தர்ப்பத்தில்,
எந்த நேரத்திலும், யாருக்கும், எதுவும் நடக்கலாம்.
தனது பாதுகாப்பையும் மற்றும் எல்லையையும் தானே தீர்மானித்துக்கொள்வது மற்றும்
இணங்குவது என்பது தனது ஆரோக்கியத்திற்கு நன்மையை பெற்றுக்கொடுக்கும்

## காட்சியின் சுபாவம்

காட்சி ஆரம்பமாவது யாருமில்லாத இடத்தில் ஒன்றுமே குறிப்பிடாத பதாதையுடன் நபர் ஒருவர் செய்யும் போராட்டம் மற்றும் அங்கே அந்த நபரின் தேவைகள், சுதந்திரம்,அவரின் வரையறை தெரியாது, ஆதங்கப்படுவதுடன், மீண்டும் நடைமுறையிலுள்ள முறைமைகளுடன் இணக்கம் காணும் சம்பவத்தை இங்கே காணலாம்.

## உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்:

- தன்னால் செய்ய முடியாதது என்ன?, செய்யக்கூடியது என்ன?
என்று தெரியாததால் மனிதர்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் எவ்வாறானது.?



# SCENE 16 ஒரு கூட்டத்தில் தனியாக

## எண்ணக்கரு

சந்தோஷம், களியாட்டம், சுதந்திரம் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்காகவே உருவாக்கப்பட்ட இடங்களில், வாழ்க்கையில் ஆழத்தில் இருக்கும் தனிமை,சோகம் அல்லது பிரச்சினைகளை குறைத்துக்கொள்வதற்கு சுதந்திர சூழமைவில் ஒத்துழைக்கும் மௌனமும் முடிவடைந்ததன் பின்னர் நிலவும் சூன்யமான தனிமை.
வெறுமையான உறவுகளின் மத்தியில் வெறுமையான மனித உடல்கள்

## காட்சியின் சுபாவம்

அனைத்தையும் இழந்து ஒன்றுமே செய்ய முடியாமல் இருக்கும் போது உள்ள மனித நடவடிக்கைகள் மற்றும் அந்த அழுத்தத்துடன் யாருடனும் எந்த உறவுகளும் இல்லாத நிலையிலான காட்சி. தொலைப்பேசி அல்லது வெளியில் எதுவும் முக்கியமாகாது தமது அழுத்தத்தை தனியாக வெளிப்படுத்துவதற்கு முயற்சிக்கும் தனிமைப்படுத்தப்பட்ட சிலரை காணலாம்.

## உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்:

- எந்தவொரு மனித தொடர்புகளும் இல்லாது தனிமைப்படுவதற்கு நேர்ந்தால் என்ன நடக்கும்?
- மன அழுத்தத்தை வெளிப்படுத்துவதற்கு மனிதர்கள் நடமாடும் பாதையினுள் என்ன செய்வார்கள்?



# SCENE 17

# முட்டாள்தனமான முடிவுகளை எடுக்க வேண்டாம்...

## எண்ணக்கரு

மாறுவது அல்லது மாற்றம் செய்வது ஊடாக தமக்குள் இருக்கும் சுதந்திரத்தை மேலோங்க இடமளிப்பது அல்லது எதுவும் நடவாதது போல் பார்த்துக்கொண்டிருப்பதற்கு பழக்கப்படுத்தும் சுபாவமானது, எந்த நேரத்திலும் மாற்றமடையலாம்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய காலம் முடிவடைந்த பின்னர், ஆபத்து நிலைக்கு முகம் கொடுப்பதும் நிம்மதியாக தோன்றும்.

## காட்சியின் சுபாவம்

மனிதர்கள் அதிக அழுத்தத்தில் இருக்கும்போது முதலாவது இலக்கக்காட்சியின் போது ஓடும் மனிதர்களாக இருந்தவர்கள், மேடையின் குறுக்கே ஓடுவதற்கு ஆரம்பித்தவுடன் ஒரு நபரால் அவர்களை தடுப்பதற்கு முயற்சிக்கப்பட்டது. இராணுவ வீரர்களால் அந்த நபர் பகிரங்கமாக தாக்கப்படுவதையும் மற்ற மனிதர்களின் பின்னூட்டம் மற்றும் அவ்வாறு தாக்கப்படும் நபருக்கு உதவி செய்ய முனைவர்களுக்கு ஏற்படும் கவலைக்கிடமான முடிவையும் காணலாம். தாக்குதலுக்கு உட்பட்ட நபர் மற்றும் அவருக்கு உதவி புரிய வந்த நபர்கள் கீழே படுத்திருந்தனர். அனைவரும் அந்த உடம்பின் மேல் ஓடுவதுடன் பலூன்களை கையில் எடுத்துக்கொண்ட இராணுவ வீரர் மேடையின் நடுவில் முன்னால் பார்த்துக்கொண்டிருப்பார்.

## உடனடி நடிப்பிற்காக கவனம் செலுத்தப்பட்ட காரணிகள்:

- ஒரு நபர் வெளிப்படையாக நடைமுறையிலிருக்கும் விதிமுறைமைக்கு எதிராக செயற்பட தீர்மானித்தால் என்னவாகும்?
- அவருக்காக முன் வருபவர்களுக்கு என்ன நடக்கும்?
- இவ்வாறு ‘வோக்கிங் பாத் எனும் நடமாடும் பாதை’ பற்றிய வார்த்தை இல்லாத நாடகம் கூட்டுச்செயற்பாடாக முன்னெடுக்கப்பட்டது.
- நாடக பிரதியை மேலதிகமாக கற்கவேண்டுமெனில் இங்கே சொடுக்கவும். (லின்க்)


05
“வோக்கிங் பாத்”
வார்த்தை இல்லாத நாடகம்
முதற்காட்சி மற்றும்
மேற்கொண்ட மாற்றம்.

வோக்கிங் பாத் – வார்த்தை இல்லாத நாடகத்திற்கு இருந்த தடைகளுக்கு மத்தியில் சமூகமயப்படுத்தலுக்காக நாடக நடிகர்கள் செயற்பட்ட விதம் மற்றும் நவம்பர் மாதம் மீண்டும் காட்சிப்படுத்தும்போது சமூகத்தில் இருந்த நிலைமையை கருத்திற்கொண்டு நாடகத்தில் சில இலக்கங்களை மாற்றம் செய்வதற்கு நாடக குழுவினர் செயற்பட்ட முறை பற்றியே இந்த அத்தியாயத்தில் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

# தடைகளுக்கு மத்தியில்

## பகிரங்க காட்சிப்படுத்தலுக்கான நாடகக் கட்டுப்பாடு அனுமதியை பெற்றுக்கொள்ளல்

இந்த காலகட்டத்தில் அரசினால் நாட்டினுள் அனைத்து கலை ஊடகங்களுக்காவும் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததுடன் "வோக்கிங் பாத் – வார்த்தை இல்லாத நாடகம்" நாடகத்திற்காக பகிரங்க காட்சிப்படுத்தலுக்கான நாடகக் கட்டுப்பாடு அனுமதியை பெற்றுக்கொள்வது தொடர்பில் நாடக குழுவினர் கலந்துரையாடினர். இந்த சவாலை வெற்றிக்கொள்வதற்காக "வோக்கிங் பாத் – வார்த்தை இல்லாத நாடகம்" பிரதியை எழுத்தாக்கம் செய்த ருவன்தி டி சிக்கேராவினால் யுக்தி ஒன்றை பாவிக்க நேரிட்டது.இந்த உருவாக்கத்தினுள் வார்த்தைகள் இல்லாத காரணத்தால் மேடையில் இடம்பெறும் சம்பவம் மற்றும் மனித நடவடிக்கைகளை மட்டும் விபரித்து பிரதிக்குள் உள்வாங்கினார். அப்போது, பிரதியை வாசிக்கும் நபருக்கு இந்த ஆக்கத்தில் இடம்பெறும் அரசை அல்லது நடைமுறை செயற்பாடுகளை விமர்சிப்பதை காண முடியாத வகையில் பிரதியாக்கம் செய்யப்பட்டது. அதன் பிரதிபலனாக எந்தவொரு கஷ்டங்களும் இல்லாது பகிரங்க காட்சிப்படுத்தலுக்கான நாடகக் கட்டுப்பாடு அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

உதாரணமாக பிரதி: மூன்றாம் இலக்கம்

SCENE 3

# சிங்கத்தை மாற்றியது யார்? **(GRRR)**

## கருத்து

இந்தக் காட்சியானது கொழும்பின் சில நடைபாதைகளை சுற்றியுள்ள வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் சிலைகளைக் குறித்ததான ஆய்வாகும். இந்த சிலைகளை சுற்றி நடந்துகொள்ள வேண்டிய புதிதாக உருவாக்கப்பட்ட சில "விதிகள்" இலங்கையின் போரின் பின்னராக கொண்டு வரப்பட்டன.இதற்கு முன்னர் இச்சிலைகளை தொடவும், அவைகளிற்கு அருகில் அமரவும் மற்றும் அவற்றுடன் விளையாடுவதற்கும் அனுமதிக்கப்பட்டாலும் தற்போது இந்த நினைவுச்சின்னங்கள் கண்காணிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த காட்சியில் குறிப்பிடப்படும் சிலையானது பெரும்பான்மை சிங்கள இனத்தவர்களை அடையாளப்படுத்தும் சிங்கத்தின் சிலையாகும். இந்த காட்சியானது நடைபாதையை பயன்படுத்தும் மக்கள் மற்றும் அவர்கள் நன்கு அறிந்த சிங்கத்தின் சிலைக்கும் இடையிலான உறவில் மாற்றத்தை ஆராய்கின்றது. இந்த காட்சி பூங்காவில் நடத்தைகளை கட்டுப்படுத்த உபயோகப்படும் விசிலினையும் அறிமுகப்படுத்துகின்றது.

## நடிப்பை முன்வைத்தல்

மேடையில் ஒரு நடிகர் தென்படுகின்றார். அவர் நான்கு சிலைகளிற்கும் முன்பும் முகத்தில் ஒரு புன்னகையுடன் சிறிது நேரம் தனிமையில் இருக்கின்றார்.

அதன்பின்பதாக ஒரு பெண்மணி மேடைக்கு வருகின்றார். உடற்பயிற்சியின் பின்னர் அவர் களைப்பாக காணப்படுகின்றார். அவர் சிலைக்கு பக்கத்தில் அமருகின்றார். அவர் சற்று ஓய்வெடுப்பதற்காக சிலையில் சாய்கின்றார். அந்த சிலை அவரை பார்த்து உறும ஆரம்பிக்கின்றது. அந்த பெண்மணி குழப்பமாக எழுந்து செல்ல ஆரம்பித்தார்.

ஒரு மனிதன் மேடைக்கு வருகின்றார். அவர் தன்னுடன் ஒரு பொதியையும் மடிக்கணணியையும் வைத்திருக்கின்றார். அவர் சிலைக்கு அருகில் அமர்ந்து மடிக்கணணியை திறந்து பின் தனது பொதிப்பையை சிலையின் மேல் தொங்கவிடுகின்றார். சிலை உறும ஆரம்பிக்கின்றது. அவர் ஆச்சரியப்படுகின்றார். அவர் தொங்கவிட்ட பொதிப்பையை கழற்றி மடிக்கணணியை மூடும்வரை சிலை உறுமிக்கொண்டேயிருக்கின்றது. வெறுப்படைந்து அவர் அவ்விடத்திலிருந்து செல்கின்றார்.

ஒரு இளம் பெண் மற்றும் ஆண் மேடையின் மற்றைய பகுதியிலிருந்து வர ஆரம்பிக்கின்றனர். அவர்கள் சிலையின் இரு பக்கத்திலும் அமர்கின்றனர். அந்த பெண் சிலையில் சாய்ந்து அமருவதுடன் அந்த ஆண் ஒரு சிகரெட்டை பற்ற வைக்கின்றார். சிலை உறும ஆரம்பிக்கின்றது. அந்த பெண் குழம்புகின்றதுடன் அந்த ஆணும் குழப்பமடைய தொடங்குகின்றான். அந்த உறுமல் அந்த ஆண் சிகரெட்டை அணைக்கும்வரையும் அந்த பெண் நேராக அமரும் வரையும் நீடிக்கின்றது. அவர்கள் இருவரும் மேடையை விட்டு செல்ல ஆரம்பிக்கின்றனர்.

ஒரு நடைபயிற்சி பழகுபவர் மேடைக்கு வருகின்றார். அவரது மேற்சட்டை வியர்வையால் ஈரமாக உள்ளது. அவர் தனது மேற்சட்டையை கழற்றும்போது சிங்கம் உறும ஆரம்பிக்கின்றது. அவர் சிரிக்க ஆரம்பிக்கின்றார். ஆனால் உறுமல் சத்தம் தொடர்ந்து அதிகமாகும் போது அவர் தனது மேற்சட்டையை போட்டுக்கொண்டு மிகவும் வேதனையுடன் மேடையிலிருந்து வெளியேறுகின்றார். .

இளைஞர் ஒருவர் மேடைக்கு வருகின்றார். அவர் தனது கரங்களில் வேர்க்கடலைகள் நிறைந்த பையொன்றை வைத்திருக்கின்றார். அவர் சிலைக்கு அருகில் அமர்ந்ததும் சிங்கம் உறும ஆரம்பிக்கின்றது. அவனும் விளையாட்டிற்கு பதில் உறும ஆரம்பிக்கின்றான். சிலையும் மீண்டும் உறும ஆரம்பிக்கின்றது. அந்த இளைஞன் ஆச்சரியப்படுகின்றான். இந்த உறுமல் விளையாட்டு ஆரம்பிக்கின்றது. அவனும் சிலையும் மாறி மாறி சத்தமாக உறும ஆரம்பிக்கின்றனர். இந்த இளைஞன் சிலையின் பின்புறத்தில் சாய்ந்து வேர்க்கடலை தோல்களை எறிய ஆரம்பித்தபடி உறும ஆரம்பிக்கின்றான். சிலை தற்போது மிகவும்

கோபமாக உறும ஆரம்பிக்கின்றது.
திடீரென இது விளையாட்டு இல்லை என்பதை இளைஞன் உணர ஆரம்பிக்கின்றான். அவன் சிலையை அமைதிப்படுத்த முயற்சி செய்கின்றான். அவன் அதின்மேல் ஏறி தான் எறிந்த வேர்க்கடலைகளை எடுத்துக்கொண்டு நடக்க ஆரம்பிக்கின்றான். ஆனால் சிங்கம் தொடர்ச்சியாக உறுமுகின்றது. அவன் குழப்பமடைந்து தனது பாதையை மாற்றி நடக்க ஆரம்பிக்கின்றான். உறுமல் நிற்கின்றது. பின்னர் ஏற்கனவே சென்ற பாதையிலேயே செல்ல ஆரம்பிக்கின்றான். சிலை மீண்டும் உறும ஆரம்பிக்கின்றது. சிலையை சமாதானப்படுத்த தான் குறிப்பிட்ட ஒரு பாதையில் செல்ல வேண்டும் என்பதை இளைஞன் உணர்கின்றான். ஆகவே அவன் அந்த பாதையில் மேலும் கீழும் நடக்க ஆரம்பிக்கின்றான். சிங்க சிலை அமைதியாகின்றது. அவர் மேடையை விட்டு இறங்கி, தான் நடக்க வேண்டிய பாதையிலிருந்து விலகாது நடந்து செல்லும் அவன் கடைசி படியை வைக்கையில் சிங்கத்தை சற்று குழப்ப குறும்புத்தனத்துடன் அந்த பாதையிலிருந்து சற்று விலகுகின்றான்.

பின்னர் ஒரு விசில் சத்தம் கேட்டது
இளைஞன் தன் நடைபாதையிலிருந்து நின்று திரும்பி பார்த்து திகைத்துப்போகின்றார். எங்கிருந்து இந்த சத்தம் வருகின்றது?

# முதற்காட்சி மற்றும் மாற்றத்தை எதிர்பார்க்கும் சமூகம்

லயனல் வென்ட் மண்டபம் - கொழும்பு 07 காட்டப்பட்டது. அந்த ஆக்கம் 75 நிமிடங்கள் இடைவேளை இல்லாது ஓடும். வோக்கிங் பாத் வார்த்தை இல்லாத நாடகம் பற்றிய முந்திய பிரச்சாரத்தின் பலனாக சிங்கள,தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கதைக்கும் பிரிவினரை பார்வையாளர் கூடத்தில் ஒன்றுகூட்டுவதற்கு வாய்ப்பு கிடைத்தது.
நாடக குழுவின் தேவை மற்றும் பார்வையாளர்களின் வேண்டுகோளின்படி நவம்பர் மாதம் (21-22) மீண்டும் ஒரு காட்சி ஆயத்தம் செய்யப்பட்டது.
“வோக்கிங் பாத் - வார்த்தைகள் இல்லாத நாடகத்தின் முதல் காட்சி ஜுலை 26-27ம் திகதிகளில் நடைமுறையில் இருக்கும் முறையைகளை மாற்றம் செய்ய முடியும் என்று நினைக்கவும், ஒரு புதிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தவும் ஏன் எங்களுக்கு நினைக்க முடியாது.” என்று அங்கே பயிற்சிக்கு இடையே நாடக குழு அங்கதத்தவர்களினால் கருத்தொன்று எழுந்தது. அந்த கருத்தை செயற்படுத்தி நாடகத்தின் முடிவை மாற்றம் செய்தல் என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.
கடைசி இலக்கத்தில் நடைமுறையில் இருக்கும் விதிமுறையை மாற்றம் செய்வதற்கு செல்லும் நபர் இராணுவத்தினரால் தாக்கப்படுவதும் அவருக்கு உதவிபுரிய செல்லும் நபர் வாழ்க்கையை இழக்க நேரிடுவதுடன் மற்றைய அனைவரும் கீழே விழுந்து கிடக்கும் உடல்களின் மேல் ஓடுவதற்கு ஆரம்பிப்பதுடன் தாக்குதலுக்கு உட்பட்ட நபர் எழுந்து எதிர்பார்ப்புகளுடன் முன்னோக்கி பார்த்துக்கொண்டிருப்பதும், அதற்கு பின்னர் அவரை கடந்து ஓடும் பிரிவில் இருந்த ஒருவர் அவரிடத்தில் நின்று அவருடன் இணைவதையும் காணலாம். அதற்கிடையில் கையில் பலூனை எடுத்துக்கொண்டு இராணுவ வீரர் ஒருவர் மேடையின் நடுவில் இருந்து முன்னால் பார்த்துக்கொண்டிருப்பார்.

## விசேட சம்பவம் ஒன்று

'வோக்கிங் பாத்' இரண்டாவது காட்சி நவம்பர் மாதம் 21 -22 காட்டப்பட்டது. 21ம் திகதி நடைமுறையிலிருக்கும் அரசிற்கு எதிராக மைத்திரிபால சிரிசேன அவர்கள் பொது வேட்பாளராக 2015 ஜனாதிபதி தேர்தலுக்காக பெயர் பிரேரிக்கப்பட்டதுடன் நடைமுறையிலிருக்கும் முறைமையை மாற்றமுடியாது என்பதை சவாலுக்கு உட்படுத்தி ஜனவரி 08ஆம் திகதி நாட்டில் மாற்றத்தை எதிர்பார்த்திருக்கும் பெரும்பான்மையானோரின் வாக்குகளால் ஏழாவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி பதவியேற்பும் இடம்பெற்றது

.



## 5 வருடத்திற்கு பின்...

மீண்டும் நாட்டில் மக்களின் பெரும்பான்மையான வாக்குகளுடன் இலங்கையில் ‘வோக்கிங் பாத்’ எனும் நடமாடும் பாதை எண்ணக்கருவிற்கு உரிமையாளரான கோட்டாபய ராஜபக்ஷ எட்டாவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக பெரும்பான்மையான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

**பதிப்புரிமை © ஸ்டேஜஸ் தியேட்டர் லிமிடட் 2020**
ஸ்டேஜஸ் தியேட்டர் குழுமத்தின் "கலைஞர் ஆராய்ச்சி, காப்பகப்படுத்தல் மற்றும் ஆவணப்படுத்தல் திட்டத்தின்" ஒரு பகுதியாக இவ் வளத்தொகுப்பு தயாரிக்கப்பட்டது.

இத் திட்டத்தின் மூலம், தொடர்ந்தும் கலைப்பயிற்சியில் ஈடுபட்டு வரும் கலைஞர்கள், ஒரு தசாப்த காலம் மதிப்புள்ள அரங்கத் தயாரிப்புகள் மற்றும் ஸ்டேஜஸ் தியேட்டர் குழுமத்தின் செயல்முறைகளை மீள்பார்வை செய்வதன் மூலம், தங்கள் சொந்த படைப்புகளை முறையாகவும், விமர்சன ரீதியாகவும் பகுப்பாய்வு செய்கின்றனர். இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததன் பின்னரான பத்து ஆண்டுகளே (2009 முதல் 2019 வரை) இத் தசாப்தமாகக் கருதப்படுகின்றது.

இது போன்ற பதினாறு வளத்தொகுப்புகள், சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வளத்தொகுப்பும், கலைஞர்களால் எழுதப்பட்டு, ஆராய்ச்சி செய்யப்பட்டு, இந்த தயாரிப்புகள் உருவாக்கப்பட்டக் காலப்பகுதியின் சமூக-அரசியல் சூழலை ஆராய்வதுடன், செயல்முறையின் போது எடுக்கப்பட்ட ஆக்கபூர்வமான முடிவுகளையும் பகுப்பாய்வு செய்கின்றது. இம் முயற்சியின் ஒரு பகுதியாக துணை வீடியோ உள்ளடக்கமும் உருவாக்கப்பட்டது. இவ் ஆராய்ச்சித் திட்டத்தின் மூலம் தயாரிக்கப்படும் அனைத்து தயாரிப்புக்களையும் www.stages.lk இணையத்தில் காணலாம்.

## வளத்தொகுப்புகள்

தொகுப்பாளர் (எழுத்துரு) ருவன்தி டி சிக்கேரா
தொகுப்பாளர் (வீடியோ): மலித் சுலார
எழுத்தாளர்கள்: ருவன்தி டி சிக்கேரா, பெமந்தி பெர்னாண்டோ, ஜயம்பதி குருகே, நதீ கம்மல்லவீர, நிபுனி ஷரதா பதிரகே, பியுமி விஜேசுந்தர
ஒழுங்கமைப்பு மற்றும் வடிவமைப்புத் தொகுப்பாளர்கள்: மல்ஷானி தெல்கஹபிட்டிய, ரஜிதா பவித்ரா மதுபாஷா
பதிப்புத்திருத்தம் மற்றும் மொழி வடிவமைப்பாளர்கள்: நதீ கம்மல்லவீர (சி), நிபுனி ஷரதா பத்திரகே (சி), கிங் ரத்னம் (த), பெமந்தி பெர்னாண்டோ (ஆ), சுதேஷ்ன ரன்முதுகல (ஆ)
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: சஞ்சய எக்னெலிகொட, ரஜிதா பவித்ரா மதுபாஷா, வெனுர நவோத், தெஷான் தென்னகோன்
ஆய்வு உதவியாளர்கள்: கௌஷல்யா ஆட்டிகல, நலின் லுசேன, ரஜிதா பவித்ரா மதுபாஷா, அக்கலங்க பிரபாஷ்வர, தினுஷிகா செனவிரத்ன
மொழிப்பெயர்ப்பாளர்கள்: ஜினந்தனி பரமேஸ்வரம் (த), ஷியாமளா வேதநாயகம் (த), ஹிரண்யதா தேவாசிரி (சி/ஆ), அருந்தி ஜயசேகர (சி/ஆ), மனுலி லாவண்யா (சி/ஆ), லிஹினி நிலவீர (சி/ஆ), பியுமி விஜேசுந்தர (ஆ)
வீடியோ பதிவுக்குழு: வெனுர நவோத், கிங் ரத்னம், பிரமிளா சமரகோன், கசுன் உக்வத்த
வலைத்தள வடிவமைப்பு மற்றும் உருவாக்கம்: ரன்சக கல்மங்கொட
நிர்வாகிகள்: மல்ஷானி தெல்கஹபிட்டிய, மகேஷ் லக்மால்

## ஸ்டேஜஸ் தியேட்டர் குழு
## வளத்தொகுப்புகள்

### DCS இலங்கையின் 7 தசாப்தங்கள்
எழுதியவர்: ருவன்தி டி சிக்கேரா, உதவியவர்கள்: நிபுனி ஷரதா பதிரகே, அக்கலங்க பிரபாஷ்வர
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: வெநுர நவோத்

### DCS Girls at Checkpoints
எழுதியவர்: பியுமி விஜேசுந்தர, உதவியவர்: அக்கலங்க பிரபாஷ்வர
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: வெநுர நவோத்

### DCS தனி உரையாடல்கள்
எழுதியவர்: ருவன்தி டி சிக்கேரா, உதவியவர்: பெமந்தி பர்னான்டோ
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: தெஷான் தென்னகோன்

### DCS ருவண்டா இலங்கை ஒத்துழைப்பு
எழுதியவர்: நிபுனி ஷரதா பத்திரகே, உதவியவர்: அக்கலங்க பிரபாஷவர
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: பிரசாத் அழுத்வத்த

### Grease யக்கா
எழுதியவர்: பெமந்தி பர்னான்டோ
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: தெஷான் தென்னகோன்

### கலுமாளி: பெரியவர்களுக்கான விசித்திரக்கதை
எழுதியவர்கள்: ருவன்தி டி சிக்கேரா, நதீ கம்மல்லவீர
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: தெஷான் தென்னகோன்

### Love and Other Objects
எழுதியவர்: ஜயம்பதி குருகே, உதவியவர்: நலின் லுசேன
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: வெநுர நவோத்

### Ovaryacting
எழுதியவர்: பியுமி விஜேசுந்தர
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: வெநுர நவோத்
புகைப்படங்கள்: பிரமிளா சமரகோன்

### Passing Stage திட்டம்
எழுதியவர்: ருவன்தி டி சிக்கேரா, உதவியவர்கள்: கௌ‘ள்யா ஆட்டிகல, ரஜிதா பவித்ரா மதுபாஷா
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: சஞ்சய எக்னெலிகொட, ரஜிதா பவித்ரா மதுபாஷா

### சிரியன் மொனோலோக்ஸ்
எழுதியவர்: ஜயம்பதி குருகே, உதவியவர்: நலின் லுசேன

ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: தெஷான் தென்னகோன்

## The Certificate

எழுதியவர்: ருவன்தி டி சிக்கேரா, உதவியவர்: அக்கலங்க பிரபாஷ்வர
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: சஞ்சய எக்னெலிகொட

## Thought Curfew

எழுதியவர்: பியுமி விஜேசுந்தர, உதவியவர்: அக்கலங்க பிரபாஷ்வர
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: டேவிட் கொட்டரல்

## வாக்கிங் பாத்

எழுதியவர்: ஜயம்பதி குருகே, உதவியவர்: நலின் லுசேன
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: பிரசாத் அழுத்வத்த

## ஸ்டேஜஸ் கலைஞர் பயிற்சித்திட்டம்

எழுதியவர்: நலின் லுசேன
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: பிரசாத் அழுத்வத்த

## Stages Junior Ensemble

எழுதியவர்: பியுமி விஜேசுந்தர
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: பியுமி விஜேசுந்தர

## Stages Senior Ensemble

எழுதியவர்: ஜயம்பதி குருகே
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: பிரசாத் அழுத்வத்த

# WALKING PATH

வோகின் பாத் වෝකිනග් පාත්

RESOURCE PACK

stages
theatre
group